பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 29 ஞாயிற்றுக்கிழமை (13-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily சுதீர்:49

## காத்மண்டுவில் பேச்சா? மறுக்கின்றனர் புலிகள்!

கொழும்பு,ஜன.13

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உத்தேச சமாதானப் பேச்சுக்களை இமாலய ராஜ்ஜியமான நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நடத்துவதற்கு இரு தரப்பும் கவனம் செலுத்திவருவதாக வெளியான செய்திகளை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் அந்த அமைப்பின் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அடியோடு மறுத்திருக்கிறார்.

பேச்சுக்களை நடத்துவதற்கு நேபாளம் உகந்த இடம் அல்ல. அது நடைமுறைக்குச் சாத்தியமானதுமல்ல என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

உத்தேச சமாதானப் பேச்சுக்கள் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நடைபெறும் சாத்தியங்கள் தென்படுவதாக கொழும்பில் வெளியாகும் 'டெய்லி மிரர்' பத்திரிகையிலும் வேறு சில சிங்கள தினசரிகளிலும் நேற்று செய்தி வெளியாகி இருந்தது. அந்தச் செய்தியைப் பின்னர் வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் பலவும் வெளியிட்டன.

தென்னிந்திய நகரில் பேச்சு நடத்த எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு அங்குள்ள அரசியல் கட்சிகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து பேச்சு நடத்த வேறு ஓர்

(02ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யுத்தம் மூள அனுமதிக்கமாட்டேன்!

### பிரதமர் ரணில் சூளுரை

கொழும்பு,ஜன.13

மீண்டும் யுத்தம் ஏற்பட்டு நாடு தீப்பிழம்பாக மாறுவதை அனுமதிக்க மாட்டேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.தே.கவின் 47ஆவது வருடாந்த மாநாடு கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

பிரதமர் மேலும் கூறியதாவது:-

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆயுதப் போராட்டம் பின்னர் பாரிய யுத்தமாக மாறியது. பல உயிர்கள், உடைமைகள் அழிந்தன. எனவே தான் யுத்தத்திற்கு முடிவுகட்டி சகல மக்களும் ஏற்கக்கூடிய தீர்வு ஒன்றை எமது அரசாங்கம் உருவாக்கும்.

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் உரு

(02ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிந்திய நகரில் பேச்சு

# புலிகளின் விருப்பத்தை இந்தியாவுக்கு நோர்வேக்குழு முறைப்படி தெரிவித்தது!

## கொழும்புத் தூதுவர் ஊடாக

கொழும்பு,ஜனவரி13

**ஸ்ரீலங்கா அரசுடனான உத்தேச சமாதானப் பேச்சுக்களை தென்னிந்திய நகரம் ஒன்றில் நடத்தவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் விருப்பத்தை நோர்வே ஏற்பாட்டாளர்கள் குழு இந்தியத் தரப்புக்கு முறைப்படி தெரியப்படுத்தியிருக்கிறது.**

**கொழும்புக்கு வந்த நோர்வே ஏற்பாட்டாளர் குழு கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் கோபாலகிருஷ்ண காந்தியைச் சந்தித்து புலிகளின் விருப்பத்தை அவரிடம் தெரிவித்ததாக அறியவந்தது.**

கடந்த வியாழனன்று கொழும்புக்கு வந்த நோர்வேக் குழுவினர் இலங்கை அரசுத் தரப்பினருடனும் ஏனைய கட்சித் தலைவர்களுடனும் விரிவாகப் பேச்சு நடத்தியிருந்தனர்.

அந்தப் பேச்சுக்கள் தொடர்பாகவும் ஏற்கனவே கடந்த 4ஆம் திகதி லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசிய விடயங்கள் குறித்தும் தூதர் கோபாலகிருஷ்ண காந்திக்கு விளக்கியுள்ளனர்.

கடந்த வியாழனன்று தூதர்

(02ஆம் பக்கம் பார்க்க)

## புதனன்று பாலசிங்கத்தை நோர்வேக் குழு சந்திக்கும்

கொழும்பு,ஜன.13

கடந்த வாரம் லண்டனில் புலிகளின் பிரதிநிதியுடனும் கடந்த வியாழனன்று கொழும்பில் அரசுப் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்திவிட்டு ஒஸ்லோ திரும்பியுள்ள நோர்வே குழுவினர் எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தை மீண்டும் சந்திக்கவுள்ளனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையை வெளியிட்டிருக்கும் நோர்வேக் குழு, கடைசியாக கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் முக்கிய அரசியல் தலைவர்களுடனும் பேசிய விடயங்களைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கத்துடன் கலந்தாலோசித்த பிறகு மீண்டும் கொழும்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே புதிய விமானசேவை தனியார் நிறுவனம் ஏற்பாடு

கொழும்பு,ஜன.13

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே தற்போது ஹெலிரூர்ஸ் நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் விமான சேவைக்கு மேலதிகமாக மற்றொரு தனியார் நிறுவனமும் விரைவில் விமான சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

விமான சேவையை ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தை அந்த நிறுவனம் பெற்றிருப்பதாகவும் -

விமான சேவையை நடத்துவது தொடர்பாக தற்போது விமானப் போக்குவரத்து அமைச்சுடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் சோதியாவின் நினைவு நிகழ்வில் பிரபா அஞ்சலி

வவுனியா,ஜன.13

விடுதலைப் புலிகள் அமைப்பின் மகளிர் அணியின் முதல் தளபதியான மேஜர் சோதியாவின் 12ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வன்னியில் நடைபெற்றன.

மேஜர் சோதியா படையணியின் ஏற்பாட்டில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் அரங்கில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மேஜர் சோதியாவின் படத்துக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கல் விழா ரூபவாஹினியில் நேரடி ஒளிபரப்பு

யாழ்ப்பாணம்,ஜன.13

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தைப் பொங்கலை ஒட்டி நாளை காலை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் காலை 6மணி முதல் 9மணி வரை ரூபவாஹினி அலைவரிசை ஒன்றில் நேரடியாக ஒளிபரப்பப்படவிருக்கின்றன.

இந்த நேரடி ஒளிபரப்பில் ஆலய பூசைகளுடன், மங்கையர்க்கரசி வித்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜயலத் இன்று வருகிறார்

### ஊடகவியலாளர்களும் படையெடுப்பு



யாழ்ப்பாணம்,ஜன.13

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

அமைச்சு அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் என சுமார் 40பேர் அடங்கிய குழுவுடன் வருகைதரும் அமைச்சர் இன்று காலை 10.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள மாநாட்டில் பங்குபற்றுவார்.

இந்த மாநாட்டில் அரச அதிபர், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் பங்குபற்றுவர்.

அதைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பப் பூங்கா, ஊர்காவற்றுறை சின்னமடு ஆலயம், யாழ். நூலகம், நாகவிகாரை, பள்ளிவாசல், மனித முன்னேற்ற நிலைய தொழிலகம் ஆகிய

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஒருசில நாள் காய்ச்சலால் உயிரிழப்போர் அதிகரிப்பு!

### ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அதிர்ச்சி

யாழ்ப்பாணம்,ஜன.13

ஒருசில நாள் காய்ச்சலோடு - செப்ரிசீமியா என்ற சந்தேகத்துடன் - ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, மூன்று, நான்கு நாள்களுக்குள் நோய் முற்றி திடீரென உயிரிழப்போர் எண்ணிக்கை, எதிர்பாராத அளவில் அதிகரித்திருப்பது குறித்து யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் அதிர்ச்சி வெளியிட்டிருக்கின்றன.

கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் இவ்வாறு உயிரிழப்போரின் எண்ணிக்கை வேகமாக உயர்ந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாத காலத்தில் இவ்வாறு காய்ச்சல் முற்றிய நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, செப்ரிசீமியா என்ற சந்தேகத்துடன் தீவிரசிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட ஐம்பதுக்கும் அதிகமானோரில் 75வீதமானோர் சிகிச்சை பலனளிக்

(02ஆம் பக்கம் பார்க்க)

## 'றான்' அமைப்பைக் கலைத்துவிட்டு புதிய சபை அமைக்க முடிவு?

கொழும்பு,ஜன.13


வடமாகாணப் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகார சபையை முழு இலங்கைக்குமான புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகார சபையாக மாற்ற அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகிறது.

வடக்கில் யுத்தத்தால் ஏற்பட்ட சொத்துக்களின் இழப்பு, உயிரிழப்புக்கள் ஆகியவற்றுக்கு கொடுப்பனவுகளை வழங்கவும், அந்தப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்குவதற்கும், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவும் என வடமாகாண புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகார சபை என்ற தனியான அதிகார சபை அமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்த அதிகார

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நேற்று நடைபெற்ற சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி பிரம்மஸ்ரீ ஜம்புவேஸ்வர மஹேஸ்வர சிவாசாரியாரின் பீடாரோஹண விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

பீடாதிபதி தனக்குரிய பீடத்தில் அமர்ந்திருக்கிறார். அருகில் மேடையில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், திருமதி வசந்தா வைத்தியநாதன் மற்றும் பீடாதிபதியின் துணைவி ஆகியோர் அமர்ந்துள்ளனர். விழாவில் கலந்துகொண்ட அந்தணர்கள் மற்றும் பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படம்: பொ.இராஜேஸ்வரன்)

# நேற்று சிறப்புற நடந்த பீடாரோஹண விழா

யாழ்ப்பாணம்,ஜன.13

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியமும் சமய நிறுவனங்களும் இணைந்து நடத்திய பிரம்மஸ்ரீ ஜம்புவேஸ்வர மஹேஸ்வரசிவாசாரியாரின் பீடாரோஹண விழா நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம், நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது.

விழாவுக்கு முன்பாக நீராவியடி பிள்ளையார் ஆலயத்திலிருந்து குரு பீடாதிபதி மங்கள வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக கல்லூரி வீதி வழியாக விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

ஊர்வலத்திலும் விழாவிலும் நூற்றுக்கணக்கான அந்தணப் பெருமக்களும் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற இருந்த இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தவிர்க்க முடியாத காரணத்தினால் விழாவில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

விழாவில் குருபீடாதிபதிக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டது. கௌரவ விருது, பீடாதிபதி விருது என்பனவும் வழங்கப்பட்டன. அத்துடன் விழாவில் கலந்துகொண்டவர்கள் பீடாதி பதிக்கு மலர்மாலைகள் அணிவித்தனர். அவரிடம் ஆசிகள் பெற்றனர்.(ஐ-10-180)

## புலிகளின் ஆயுத முகவர் நியூஸிலாந்தில்!

கொழும்பு,ஜன.13

விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு ஆயுத முகவர் என்று கருதப்படும் குமரன் பத்மநாதன் நியூஸிலாந்து நாட்டுக்குச் சென்றிருப்பதாக அந்நாட்டு பத்திரிகைகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

நியூஸிலாந்தின் முன்னணி நிறுவனங்கள் பல புலிகளுக்கு நிதி உதவியை வழங்குவதுடன் ஆயுதங்களையும் கொள்வனவு செய்து வழங்கி வருகின்றன என்றும் -

இத்தகைய நிறுவனங்களுடன் பேச்சுக்களை நடத்தவே அவர் அங்கு சென்றுள்ளதாகவும் உளவுப் பிரிவினரின் தகவல்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.(ஐ-6)

## வடக்கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பிரபல வர்த்தக முகவர் நிறுவனம் ஒன்று சுவிற்ஸர்லாந்து நாட்டின் கம்பனி ஒன்றுடன் இணைந்து இந்த விமான சேவையை நடத்தவுள்ளது.

இதேவேளை -

யாழ்ப்பாணத்துக்கு தனியார் விமானப் போக்குவரத்துச் சேவைகளை நடத்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கான விமான சேவைகளில் தனியாரை ஈடுபடுத்துவதன்மூலம் பயணக் கட்டணத்தின் தற்போதைய தொகையைக் குறைக்க முடியும் என்றும் இது தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார். (ஐ-6)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களுக்கு அமைச்சர் செல்வார்.

மாலையில் யாழ்.ஆயர், தென்னிந்திய திருச்சபை பேராயர் ஆகியோரைத் தனித்தனியே அவர் சந்திப்பார்.

இரவு 7.30 மணிக்கு சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அமைச்சர் சந்திக்கவுள்ளார்.

அரச தொலைக்காட்சியான ரூபவாஹினியின் படப்பிடிப்புக் குழுவினர், எம்.ரி.வி. தொலைக்காட்சிக் குழுவினர் மற்றும் தென்னிலங்கைப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் என ஊடகவியலாளர்களும் அமைச்சரோடு இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர். (ஐ-3)

## நெதர்லாந்தில் 6 இலங்கையர் கைது!

பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்காக லொறி ஒன்றில் கொள்கலனில் மறைத்து ஏற்றிச் செல்லப்பட்ட ஆறு இலங்கையர் உட்பட 11 பேரை நெதர்லாந்து பொலீஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

லொறியை பொலீஸார் சோதனை செய்த சமயம் கொள்கலனுக்குள் இருந்து சத்தம் வெளியே வரவே சந்தேகம் கொண்டு அந்தக் கொள்கலனைத் திறந்த சமயம் இவர்கள் உள்ளே இருக்கக் காணப்பட்டனர். (ஐ-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காந்தியைச் சந்தித்த நோர்வே குழுவினர் அவருடன் நடத்திய பேச்சின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

எனினும் தென்னிந்திய நகரம் ஒன்றில் பேச்சை நடத்தவேண்டும் என்ற புலிகள் தரப்பின் விருப்பத்தை இச் சந்திப்பின்போது நோர்வே பிரதிநிதிகள் இந்தியத் தூதரிடம் முறைப்படி தெரிவித்ததாக நம்பகரமான தகவல்கள் தெரிவித்தன.

இந்த விடயத்தை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி இது விடயத்தில் அரசின் நிலைப்பாட்டை அறிந்து அதனை விரைவில் தெரிவிப்பதாக இந்தியத்தூதர் நோர்வேக் குழுவினரிடம் கூறியதாகவும் - அறிய வந்தது. (ஐ-3-6)

## காத்மண்டுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உகந்த இடத்தை தெரிவு செய்வதில் இருதரப்பும் கவனம் செலுத்துவதாக அந்தச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்த உகந்த இடமாக நேபாளம் நாட்டை புலிகள் கருதுவதாக பாரிஸில் உள்ள புலிகளின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி இந்திய செயற்கைக்கோள் தொலைக்காட்சிகளில் செய்திகள் வெளியிடப்பட்டிருப்பதாக 'டெய்லி மிரர்' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் இந்தச் செய்திகளை அடியோடு நிராகரித்தார். (ஐ)

# ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை ஏப்ரல் 22இல் ஆரம்பம்

கொழும்பு,ஜன.13

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22ஆம் திகதியே ஆரம்பமாகும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

இந்தப் பரீட்சை ஏப்ரல் முதலாம திகதி ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் முதலாம் திகதி பரீட்சையை ஆரம்பித்து தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்துக்கு முன்னரும் பின்னருமாக பரீட்சையை இரு கட்டங்களாக நடத்துவது என முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதனால் இடையூறுகள் மற்றும் சிரமங்கள் ஏற்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே ஏப்ரல் 22ஆம் திகதிமுதல் பரீட்சையை நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## மகாபொல கொடுப்பனவு அதிகரிப்பு

மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை நூற்றுஐம்பது ரூபாவால் அதிகரிக்கப்பட இருப்பதாக வர்த்தக, நுகர்வோர் அலுவல்கள் அமைச்சர் ரவி கருணநாயக்க தெரிவித்துள்ளார்.

இனிமேல் மாணவர்கள் கொடுப்பனவாக ஆயிரத்து 650 ரூபாவைப் பெறுவர். (ஐ-3)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கப்பட்ட மாகாண சபை முறையை அன்று பலரும் எதிர்த்தனர். அந்த ஒப்பந்தம் உரிய முறையில் அமுலாகியிருந்தால் இன்று இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது.

யுத்தத்தால் நாடு தீப்பிழம்பாகி அழிந்துபோவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது. அதற்கு தீர்வு காணவே உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எமது சமாதானப் பயணத்தை இடையில் யாரும் குழப்பக்கூடாது. அவ்வாறு குழப்புபவர்களை நாம் இனம் கண்டு அவர்களுக்கு நல்ல புத்திமதி கூறுவோம் - என்றார் அவர். (ஐ-3)

## ஒருசில நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத நிலையில் உயிரிழந்துவிட்டனர்.

இவர்கள் பெரும்பாலும் 'செப்ரிசீமியா' என்ற சந்தேகத்தில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டாலும் கூட உண்மையில் அவர்கள் செப்ரிசீமியாவால் பீடிக்கப்பட்டவர்களா அல்லது நோய்க்கு வேறு காரணங்கள் உண்டா என்பது தெரியாமல் வைத்திய வட்டாரங்கள் குழம்பி வருவதாகத் தெரிகின்றது.

இதேசமயம், யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட இருவருக்கு 'டெங்கு' காய்ச்சல் பீடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இவர்களது இரத்த மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஏற்கனவே யாழ்.ஆஸ்பத்திரியில் 'செப்ரிசீமியா' நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தவர்களில் கணிசமானோருக்கும் டெங்குக் காய்ச்சல் பீடித்திருந்ததா அல்லது நுளம்பால் பரவும் வேறு நோய்கள் அவர்களைப் பீடித்திருந்ததா என்றும் வைத்திய வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றன.

கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்படுவோர் திடீரென இருதய செயலிழப்பு அல்லது சிறுநீரகப் பாதிப்பு ஆகியவற்றினால் உயிரிழக்கும் சம்பவங்களே அதிகம் நிகழ்ந்துள்ளன.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் - இருப்பிடங்கள் கிட்டக்கிட்டவாக அமைந்திருப்பதும் அவதானிக்கப்பட்டிருப்பதால் நுளம்பு போன்ற காவிகளால் ஏற்படும் ஒரு தொற்று நோயாக - அல்லது வைரஸ் தாக்கமாக - இது இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (உ)

## மகா நாயக்கர்களை ஜனாதிபதி சந்தித்தார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அஸ்கிரிய, மல்வத்தை மகா நாயக்கர்களை நேற்று சந்தித்து ஆசி பெற்றார்.

புதிய அரசு எடுக்கும் சமாதான முயற்சிகளை முழுமையாக ஏற்று அதற்குத் தலைமை வகித்து நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண பூரண ஒத்துழைப்பை நல்குவதாக ஜனாதிபதி மகாநாயக்கர்களிடம் தெரிவித்தார். (ஐ-3-6)

## பாதுகாவலர் சங்க உறுப்பினருக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.13

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலுக்கு வருகைதருமாறு சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுடனான சந்திப்புத் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## அழைப்புக் கடிதம் கிடைக்காதோருக்கும் நேர்முகத் தேர்வு

யாழ். மாவட்டத்தில் இருந்து பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கு விண்ணப்பித்து இதுவரை நேர்முகத் தேர்விற்கான கடிதம் கிடைக்கப்பெறாதோரும் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவிருக்கின்றது.

விண்ணப்பம் அனுப்பியதற்கு ஆதாரமாக பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது பதிவுத்தபால் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் நாளைமறுதினம் காலை 9மணிக்கு யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்குச் சமுகம் அளிக்கும்படி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு சமுகம் அளிக்கும்போது சகல ஆவணங்களையும் எடுத்துவரும்படியும் அவர் கோரியுள்ளார். உரிய திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்காதவர்களுக்கு எக்காரணம் கொண்டும் நேர்முகப் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

## நாளை நடப்பவை

பருத்தித்துறை,ஜன.13

துன்னாலை புனித சதா சகாய அன்னை ஆலய புதிய மண்டபம் நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு திருப்பலி பூசையின் பின்னர் கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு.யேசுரத்தினத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

(ஐ-118)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.கொட்டடி சனசமூக நிலையத்தினர் பொங்கலை ஒட்டி நாளை திங்கட்கிழமை நடத்தும் விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் தலைமையில் 'பொங்கி எழுவோம்' என்னும் தலைப்பில் கவியரங்கம் இடம்பெறவிருக்கின்றது. (ஐ-3)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜன.13

நீர்வேலி வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழாவும் சிறுவர் நிகழ்வும் நாளை திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு நீர்வேலி வடக்கு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சிறுவர்களின் 'காத்தவராயன் சிந்து நடைக்கூத்து' இந்த விழாவில் இடம்பெறும்.

(ஐ-3)

☆ ☆ ☆


யாழ்ப்பாணம்,ஜன.13

சுன்னாகம் இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை பிற்பகல் 2மணிக்கு ஐக்கிய அபிவிருத்தி சனசமூக நிலையத்தின் முன்றிலில் பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் தமது அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு சுன்னாகம் இந்து இளைஞர் மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

(ஐ-6)

## விவேகானந்தர் வாக்கு



நமது புனிதமான தாய் நாடு சமயத்துக்கும் தத்துவத்துக்கும் பெயர்பெற்றது. ஆன்மீகத்தில் சிறந்த நாடு, மகத்தான துறவு பூண்ட மகான்கள் பிறந்த நாடு, இங்கே, இங்கு மட்டுமே மிகப் பழைய காலத்திலிருந்து இந்த மிக உயர்ந்த நவீன காலம் வரை, மனித வாழ்வின் உன்னதமான இலட்சியம் மனிதனுக்குத் திறந்துவைக்கப்பட்டது.

மேல்திசை நாடுகள் பலவற்றிற்கும் நான் சென்றிருந்தேன். பல்வேறு இனமக்கள் வாழும் இடங்களுக்கெல்லாம் பயணம் செய்திருக்கிறேன், ஒவ்வொரு நாடும், ஒவ்வோர் இனமும் ஒரு குறிப்பிட்ட கொள்கையைப் பெற்றிருப்பதைக் கண்டேன். மிகச் சிறந்த இலட்சியம் ஒன்று அந்த நாட்டு வாழ்க்கையின் முதுகெலும்புபோல் அமைந்திருக்கிறது. அரசியலோ, அதிகாரமோ, வாணிகத் தலைமையோ, வாணிபப் பேரறிவோ, கடல் ஆதிக்கத் திறனோ இந்தியாவின் முதுகெலும்பாக அமைந்திருக்கவில்லை; சமயம், சமயம் மட்டுமே அதன் முதுகெலும்பாக அமைந்துள்ளது. நாம் பெற்றதெல்லாம், பெறவிரும்புவதெல்லாம் சமயம் மட்டுமே. இந்தியாவில் ஆன்மீகம் எப்போதும் இருந்துவந்திருக்கிறது.


## வளர்மதி கல்வி நிலையம்

மட்டுவில் தெற்கு.

மேற்படி எமது கல்வி நிலையம் மீண்டும் மட்டுவில் தெற்கில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விவரங்களை நாளை (14-01-2002) திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கல்வி நிலையத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
வளர்மதி கல்வி நிலையம், மட்டுவில்.

(97046)

# எகிப்திய நாட்டு மீன்பிடிக் கப்பல் புயலில் சிக்கிக் கடலில் கவிழ்ந்தது!

## 40 மீனவர்களைக் காணவில்லை

அலெக்சாண்ரியா,ஜன.13

எகிப்தில் மீன்பிடிக் கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் கடும் புயலில் சிக்கிக் கடலில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 40 மீனவர்கள் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளனர். அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சுயஸ்காலவாயின் வடபகுதியில் ராஸ் காரீப் கரையில் இருந்து சுமார் 32 கிலோ மீற்றர்கள் தொலைவில் அபுஅல் பாவரிஸ் என்ற அந்த மீன்பிடிக் கப்பல் கவிழ்ந்தது. அதில் இருந்த 42 மீனவர்களில் இருவர் மட்டுமே உயிருடன் காப்பாற்றப்பட்டதாகப் பொலீஸார் கூறினர். உயிரிழந்த மீனவர் ஒருவரின் சடலமும் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த கடற்பகுதியில் திடீரென்று வீசத் தொடங்கிய புயலால் 10 மீற்றர்கள் உயரத்துக்கு அலைகள் எழுந்ததாகவும் -

அந்தச் சமயத்தில் மீனவர்கள் மீன்பிடிப் பணிகளில் கப்பலின் மேல் தளத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகவும் -

உயர்ந்து எழுந்து கப்பலைக் கவிழ்த்த அலை மேல்தளத்தில் இருந்த மீனவர்களைக் கடலினுள் இழுத்துச் சென்றுவிட்டதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் கப்பல் கடந்த சில நாள்களாகவே கடலில் தரித்து நின்று மீன்பிடிப்பதில் ஈடுபட்டது. அந்தக் கப்பலுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதை அடுத்தே அதனைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

எகிப்திய கடற்படையினர், விமானங்களின் உதவியுடன் கப்பலைத் தேடினர். அந்தவேளையில் கப்பல் கவிழ்ந்து நீரில் மூழ்கிக்கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த ஒருவார காலமாக எகிப்தில் வீசும் கடும் காற்றினால் வான் மற்றும் கடல் பயணங்கள் தடைப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# காஸா கடற்கரைப் பகுதியில் பலஸ்தீன ஆயுதக் களஞ்சியம் இஸ்ரேலால் தாக்கியழிப்பு!

காஸா,ஜன.13

பலஸ்தீனரின் ஆயுதச் சேமிப்புக் களஞ்சியமொன்றை இஸ்ரேல் நேற்று தாக்கியழித்ததாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

காஸாவில் பலஸ்தீன கடற்படைப் பொலீஸாரின் நிலை மீது, இஸ்ரேலிய ராணுவப் படகுகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் -

இதில் அங்கிருந்த ஆயுதக் களஞ்சியம் அழிக்கப்பட்டதாகவும் -

பலஸ்தீனப் பாதுகாப்புத்துறையின் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்றைய தாக்குதலில் கரையில் நிறுத்தப்பட்டிருந்த மீன்பிடிப் படகுகள் சிலவும் சேதமடைந்துள்ளன. ஆனால் அங்கு நிறுத்தப்பட்டிருந்த யஸீர் அரபாத்தின் பிரத்தியேகப் படகுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை.

பலஸ்தீனர்கள் நிலைமையை மேலும் மோசமாக்கிக் கொண்டிருந்தால், இத்தகைய தாக்குதல்கள் தொடரும் என்று இஸ்ரேலியர்கள் எச்சரித்துள்ளனர்.



இஸ்ரேலியப் படையினரால் தகர்க்கப்பட்ட தனது வீட்டில் பலஸ்தீன மாது

பலஸ்தீனப் பிரதேசத்துக்கு உட்பட்ட கரைக்கு சமீபமாக நிறுத்தப்பட்டிருந்த இஸ்ரேலிய இராணுவப் படகொன்றில் இருந்து இரு ஏவுகணைகள் செலுத்தப்பட்டதாகவும் -

அவை பலஸ்தீனக் கடற்படைப் பொலீஸாரின் நிலைகளைத் தாக்கியதில் ஆயுதக் களஞ்சியம் பற்றியெரிந்ததாகவும் -

நேரில் கண்டவர்கள கூறியதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

சில நாள்களின் முன்னர் செங்கடல் பகுதியில் தனது கடற்படையினரால் மறித்து தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பலில் உள்ள ஆயுதங்கள் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்காக யஸீர் அரபாத்தின் உத்தரவின் பேரில் எடுத்துவரப்பட்டதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கும் தற்போதைய தாக்குதலுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், அந்தக் குற்றச்சாட்டை பலஸ்தீன அதிகாரசபை நிராகரித்து விட்டது.

இந்த நிலையில் இரு கடற்படை அதிகாரிகள் உட்பட 3 பலஸ்தீனர்களைக் கப்பலில் ஆயுதங்கள் கடத்தப்பட்ட விடயம் தொடர்பாக கைது செய்யும்படி பலஸ்தீன அதிகாரசபை ஆணை பிறப்பித்த சில மணித்தியாலங்களில் இஸ்ரேலியத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## இஸ்லாமிய மாணவிக்கு அமெரிக்காவில் நிகழ்ந்த அவமதிப்பு!

அமெரிக்காவில் கல்வி பயிலும் இஸ்லாமிய மாணவியான எனாஸ் சர்சோ (வயது 17) என்பவர் மத சம்பிரதாயப்படி தனது தலையை மூடி அணிந்திருந்த 'ஹிஜாப்' எனப்படும் அங்கியை அகற்றும்படி வாஷிங்டன் பெல்டிமோர் விமான நிலையத்தில் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இதற்கு அமெரிக்க இஸ்லாமியச் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இஸ்லாமியப் பெண்ணொருவரிடம் அவர் தலையில் அணிந்துள்ள 'ஹிஜாப்'பை கழற்றுமாறு கூறுவது, பலரின் மத்தியில் அவரை நிர்வாணமாக்குவதற்குச் சமமாகும் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதல்களின் பின்னர் அங்குள்ள விமான நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை விமான நிலையங்களில் பாதுகாப்புச் சோதனைகளின்போது இன, மத ரீதியான பாரபட்சம் காட்டப்படுவதாக - குறிப்பாக இஸ்லாமிய மதச் சம்பிரதாயங்கள் அவமதிக்கப்படுவதாக - சுமார் 170 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

மலர்வு 20 - 05 - 1925



உதிர்வு 14 - 12 - 2001

### அமரர் முருகேசு இரத்தினம்

அன்பின் திருவுருவே
தர்மத்தின் பிறப்பிடமே
பாசத்தின் உறைவிடமே
எங்கள் குடும்பத்தின் தீபமே
நாள்கள் மறைந்தாலும்
மாதங்கள் நகர்ந்தாலும்
ஆறாது எங்கள் சோகம்
அகலாது உங்கள் நினைவு!

பிரிவால் துயருறும்,
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கந்தசாமி கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(C/2 0210),

# விடுதலைப் புலிகள் குறித்து கருணாநிதி விடுத்த சவால்!

சென்னை,ஜன.13

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா முன்னர் ஒருபோதும் ஆதரவு வழங்கியதே இல்லை என்று நிரூபித்தால் நான் அரசியலில் இருந்து விலகத் தயார்"

- இவ்வாறு தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி நேற்று சவால் விடுத்தார்.

சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோதே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

"1990ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகளை ஆதரித்து ஜெயலலிதா பேசியுள்ளார். அப்படி அவர் பேசவில்லை என்று கூற பன்னீர்செல்வம் தயாரா? அவருடைய தலைவியான ஜெயலலிதா புலிகளை ஆதரித்துப் பேச வில்லை என்று பன்னீர்செல்வம் நிரூபித்தால் நான் அரசியலிலிருந்து விலகுகிறேன்.

"பன்னீர்செல்வத்தால் அவ்வாறு நிரூபிக்க முடியாவிட்டால் முதல்வர். பதவியிலிருந்து அவர் விலகுவாரா? குறைந்தது சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவாரா?"

இப்படி கருணாநிதி சவால் கேள்விகளை எழுப்பினார். (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான

செல்வி சந்திரபவானி நடராஜாவின் தாயார்

### திருமதி கனகேஸ்வரி நடராஜா

அவர்கள் காலமானதையிட்டு எமது பாடசாலையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

(97054)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சபாரத்தினம் மகேஸ்வரி

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி சபாரத்தினம் மகேஸ்வரி (11.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சபாரத்தினம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், நடராசா (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), தவமணிதேவி (மருந்தாளர் - அரசினர் வைத்தியசாலை, கொழும்பு), காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் சிவானந்தராசா (இளைப்பாறிய வானிலை ஆராய்ச்சி உத்தியோகத்தர்), கணேசானந்தன் (கணக்காளர்,லண்டன்), Dr.விஜய்லக்சுமி (அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், உமாகுமாரி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற தேவதாசன் (லிகிதர் - மாநகர சபை, யாழ்ப்பாணம்) மற்றும் தவராசதேவா (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) Dr.ஜானகி(அரசினர் வைத்தியசாலை, கொழும்பு), Dr.மல்லிகாதேவி (லண்டன்), ஞானலிங்கம் (அதிபர், யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கோணேசகுமார் (கணக்காளர், லண்டன்), ஹம்சா (இந்தியா), ரேவதி (ரஷ்யா), நரேன் (லண்டன்), நாடியா (ஆஸ்திரேலியா), பிரஷீபா (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கேதீஸ்(வட்டு.இந்துக் கல்லூரி), முருகா, துர்க்கா, சத்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2002) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டுக்கோட்டை.* (97042)

தகவல்:
ச.ஞானலிங்கம்
(அதிபர்-மருமகன்)

### திருமதி பொன்னையா பூமணி

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னையா பூமணி 09.01.2002 அன்று மல்லாவியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும், சாந்தலிங்கம், காசிலிங்கம், செம்பலிங்கம், சாம்பசிவம், பராசசிங்கம், சியாமளா, ரஞ்சன் (ஆசிரியர், கோட்டைகட்டி ம.வி.), காலஞ்சென்றவர்களான சேனாதிராசா, தங்கேஸ்வரி, லோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாயகம், செல்வரெட்ணம், காலஞ்சென்ற இராசையா ஆகியோரின் சகோதரியும், சொர்ணம்மா, நாகரத்தினம், புத்திரி, ஜேந்தா, சண்முகநாதன், சுபா ஆகியோரின் மாமியாரும், தயாபரன் (கொழும்பு), வதனி, வாசுகி, வனிதா, தயாசீலன் (கொழும்பு), ஜெகன், ஜெசிபா, ரமேஷ், ரஞ்சிதா, பிரதீபா, வாசுகி (கொழும்பு), பாலகிருஷ்ணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.01.2002 அன்று மல்லாவியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*395/3,நாவலர் வீதி,*
*நல்லூர்.*
*(மண்கும்பான்)* (97053)

தகவல்
பொ.காசிலிங்கம்
(மகன்)

### திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா

கைதடி மேற்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா அவர்கள் நேற்று (12.01.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கைதடி மேற்கைச் சேர்ந்த வே.பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் முருகையா, சின்னத்தம்பி, செல்லம்மா, பூபாலசிங்கம் சின்னம்மா ஆகியோரின் சகோதரியும் குலசிங்கம் (ராசா), வசந்தா, புவனேஸ்வரன் (ரகு), ஜெகதீஸ்வரன் (கிராம சபை - கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இலங்கேஸ்வரியின் மாமியாரும், ஜெயந்தா, கஜவர்ணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சந்தானம் வீட்டில் இன்று (13.01.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தானம் வீடு,*
*பலநோக்குக் கூ.ச.வீதி,*
*அளவெட்டி.* (97048)

தகவல்:
வே.பொன்னம்பலம்
(கணவர்)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் S.V.தம்பையா

சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தின் ஆயுட்கால உறுப்பினரும், முன்னோடித் தலைவர்களில் ஒருவரும், புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் உறுப்பினரும் பிரபல தொழிலதிபருமான S.V. தம்பையா அவர்கள் கொழும்பில் மரணமான செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்.

அன்னார் எமது சமாசத்திற்கு தன்குடும்ப சகிதம் ஆற்றிய சேவை மிகப்பெரியது. அவரின் மரணம் அன்னாரின் குடும்பத்திற்கு மட்டுமன்றி முழுச் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அமரரின் பிரிவைத் தாங்கமுடியாமல் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன், அவர் குடும்பத்தினருக்கும், உறவினர்களுககும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி.... சாந்தி..... சாந்தி.....*

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்,
புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம்
யாழ். - நல்லூர் பிராந்திய சபை.
வலி.கிழக்கு பிராந்திய சபை.
வலி.வடக்கு பிராந்திய சபை.
வடமராட்சி பிராந்திய சபை.
தென்மராட்சி பிராந்திய சபை.

*மிசன் பாடசாலை வீதி, கோண்டாவில்.* (97038)

## இலங்கை மீனவர் நால்வர் விடுவிப்பு

சென்னை,ஜன.13

கொச்சின் சிறையில் கடந்த இரண்டு ஆண்டு காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் நால்வர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், நால்வருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்த மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை தேசிய கடற்றொழிலாளர் ஒருமைப்பாட்டு நிறுவனம் செலுத்தியதையடுத்து அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-4-5)

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை சித்த மருத்துவ கற்கைநெறி*

மேற்படி கற்கைநெறியின் புதிய கல்வி ஆண்டுக்கான சகல விரிவுரைகளும் 16.01.2002இல் ஆரம்பமாகின்றன.

(C-20272) -பதிவாளர்,

## யோகர் சுவாமி மகளிர் நிலைய ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.13

கீரிமலை யோகர் சுவாமி மகளிர் தவ நிலையத்தின் 16ஆவது ஆண்டு விழா நாளை திங்கட்கிழமை ராஜன் வாசா, புலோலி தெற்கு, பருத்தித்துறை என்ற முகவரியில் நடைபெறும்.

மேற்படி விழா இதுவரை காலமும் செம்மணி வீதியில் உள்ள யோகர் சுவாமி குருகுலத்தில் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கண்ணீர்க் காணிக்கை



திருமதி

**மகேஸ்வரன் உமாதேவி**

எங்கள் மின் நிலையத்தில்
மின் அத்தியட்சகராகக் கடமையாற்றும்
**திரு.மகேஸ்வரன்** அவர்களது பாரியார்

**திருமதி உமாதேவி**

அவர்களின் திடீர் மரணத்தை அறிந்து நாம் கவலையுடன் கண்ணீர்க் காணிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:*

மத்திய மின் நிலைய ஊழியர்கள்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம்.

(97037)

# நினைவு அஞ்சலி



**ஆ.மகாதேவன்** (B.Sc., Dip. in Ed., SLAES)

(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

இடியென வந்த செய்தி கேட்டு
இதயத் துடிப் பொருநொடி நின்றது
அடியெடுத்த கால் அகல மறுத்தது
மடிந்த தெங்கள் மாணிக்க மன்றோ!

வேதியல் வேள்வியில் ஆகுதியே
தீயின்று உன்னைத் தின்று தீர்த்ததோ? - இல்லை
தீயோடு நீ சேர்ந்து ஜோதியானாய்
சான்றோனே நீயொரு சரித்திரமானாய்.

(97040) பலாலி ஆசிரியர் கலாசாலை
1998-1999 கல்வியாண்டு வடமராட்சி ஆசிரியர்கள்.

# பிரிவுபசார விழா



யாழ்.மாவட்டத்தில் கடந்த 05 வருடங்களாக மிகுந்த அர்ப்பணிப்புடன் திறம்பட சேவையாற்றி, புலம் பெயர்ந்து நலிவுறும் நிலையில் இருந்த யாழ்.மாவட்ட கூட்டுறவு நிறுவனங்கள் மீண்டும் செயல்படவும், கூட்டுறவு ஊழியர்களின் வாழ்வு வளம்பெறவும், பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களது தோற்றத்திற்கு களம் அமைத்தும், இம்மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் மேம்பாட்டிற்கு அயராது இதயசுத்தியுடன் பணிபுரிந்து, திருகோணமலை கூட்டுறவுத் திணைக்கள தலைமையகத்திற்கு மாற்றலாகிச் செல்லும்

*யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்*

## உயர்திரு.செ.கு.சண்முகநாதன் அவர்களை

யாழ். மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களின் சார்பில், இன்று (13-01-2002) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்க கேட்போர் கூட மண்டபத்தில் பிரிவுபசார விழா நடத்திக் கௌரவிப்பதுடன், அன்னார் சகல சீர்களும் சிறப்புகளும் பெற்று வளமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

யாழ்.மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களினதும்,
யாழ்.மாவட்ட விவ.நுகர்.கூ.சங்கங்களின் சமாசம் மற்றும்
யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச
தலைவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(C/20271)

# திருச்சபைகளின் ஒன்றிப்பு வாரம்

## தை 18-25 வரை

"இறையரசை நோக்கிய ஒன்றிப்பின் பயணம்"

"Ecumenical Journey Towards the Kingdom of God"

அருள் உரை, கருத்தரங்குகள் நடத்துபவர்:

**Rev. Fr. Thomas C.Kuriacose, S.J.**

அருள் தந்தை தோமஸ் குறியகோஸ், இயேசு சபை

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| வெள்ளி 18 | பி.ப.4.00 | ஒன்றிப்பு வழிபாடு - மெதடிஸ்த சபை, பருத்தித்துறை. |
| சனி 19 | மு.ப.9.00 - 3.30 | இறை மக்கள் கருத்தரங்கு - ஆச்சிரமம், மருதனார்மடம். |
| | பி.ப.4.00 | ஒன்றிப்பு வழிபாடு - ஆச்சிரமம், மருதனார்மடம். |
| ஞாயிறு 20 | | தத்தம் சபைகளில் ஒன்றிப்பு வழிபாடுகள் |
| திங்கள் 21 | மு.ப.9.00 - 1.30 | குருமார் கருத்தரங்கு - யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி. |
| | பி.ப.1.00 - 3.30 | பெண்களுக்கான வேதப்படிப்பு - யாழ். வை. எம். சி. ஏ. (இறுதியில் வை. டபிள்யு. சி. ஏ. யின் அமைக்கப்படும்) |
| செவ்வாய் 22 | பி.ப.4.00 | ஒன்றிப்பு வழிபாடு பேராலயம் C.S.I., வட்டுக்கோட்டை. |
| புதன் 23 | பி.ப.4.00 | ஒன்றிப்பு வழிபாடு - புனித யுவானியார் ஆலயம், அல்லைப்பிட்டி. |
| வியாழன் 24 | மு.ப.9.00-4.00 | வாலிபர் கருத்தரங்கு - வை. எம். சி. ஏ., யாழ்ப்பாணம். |
| வெள்ளி 25 | பி.ப.4.00 | ஆயர்கள் கலந்துகொள்ளும் ஒன்றிப்பு வழிபாடு - பீற்றோ மண்டபம், சென். ஜோன்ஸ் கல்லூரி. |

இறை மக்கள், பெண்கள், வாலிபர், குருமார் - மேற்படி கருத்தரங்குகளில் பங்குபெற விரும்புவோர் 16.01.2002இற்கு முன் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியச் செயலாளரிடம் பெயர்களைப் பதிவுசெய்யவும். ஒன்றிப்பு வழிபாடுகளில் யாவரும் கலந்துகொள்ளலாம்.

*ஒன்றிப்புக்கான ஆணைக்குழு,*
*கத்தோலிக்க மறை மாவட்டம்,*
*ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*

*யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்*
*வை.எம்.சி.ஏ. கட்டடம்,*
*109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.* (97023)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

13.01.2002



அன்னையின் மடியில்: 25 - 08 - 1938

இறைவனின் பிடியில்: 14 - 12 - 2001

## அமரர் சின்னத்தம்பி நாகலிங்கம்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
இரக்கத்தின் இலக்கணமாய் ஈகையின் சின்னமாய்
குடும்பத்தின் ஒளி விளக்கை ஏற்றி விட்டீர்,
ஊடு பற்ற விட்டுவிட்டுச் சென்று விட்டீர்கள்.
புன்னகையால் பூவுலகை வென்றவனே!
பூத்த பூக்கள் வாடுதையா, உமையேங்கி
அமரராகி ஈசனடி அடைந்திட்ட ஐயாவே! உம்
நினைவு அகலாது ஏங்குகிறோம்.....

எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டதும் ஓடோடி வந்து எமக்கு உதவி செய்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (13. 01. 2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

*சிவசக்தி கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (C-20269)

தகவல்:
நா.உமாசங்கர் (மகன்)
இறங்குதுறை, பருத்தித்துறை.

## உதயன்

## நீதிமன்றங்களின் முன்மாதிரி!

"குடாநாட்டில் சட்ட அங்கீகாரம் இன்றியும், அதிக விலைக்கும் விற்கப்படும் பெற்றோல், மண்எண்ணெய் போன்ற எரிபொருள்களைக் கைப் பற்றி, அவ்வாறு விற்பனை செய்வோரையும் கைதுசெய்து, நீதிமன்றில் முன்னிலைப்படுத்துக!"

- இப்படி உத்தரவிட்டிருக்கின்றார் யாழ்.மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான இ.த.விக்னராஜா.

இந்த நடவடிக்கையை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் மேற்கொள்வதற்கு வசதியாக அவர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் அனுசரணை உதவிகளை வழங்கும்படி யாழ்.பொலீஸாருக்கும் அவர் உத்தரவிட்டிருக்கின்றார்.

இதேபோன்று, பாண் விநியோகம் தொடர்பாகவும் நீதிபதி தலையிட்டு உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கின்றார். சுகாதாரமற்ற முறையில் பாணைத் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல் போன்றவற்றைத் தடுக்கும் நோக்குடன் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் பொதுமக்களுடன் சம்பந்தப்பட்ட - அத்தியாவசியப் பொருள்களுடன் தொடர்புடைய - இரண்டு பெருஞ் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் முயற்சியாக நீதிபதி இந்த உத்தரவுகளை விடுத்திருக்கின்றார்.

நீதிமன்றத் தலையீடின்றியே சிவில் அதிகாரிகள் மட்டத்தில் எப்போதோ தீர்வு கண்டிருக்கவேண்டிய பிரச்சினைகள் இவை. தீர்வு காணப்படாமல் இழுபட்டு, நெருக்கடி முற்றி, மக்கள் அவதியுற்றதால் வேறுவழியின்றி நீதிமன்றம் தலையிடவேண்டிய - தானாகவே தலையிடவேண்டிய - நிலைமை ஏற்பட்டது.

சாதாரண காலத்தில் சிவில் நிர்வாகம் செயலிழக்கும்போது அவ்விடயங்களில் நீதிமன்றம் தலையிடுவது வழமைதான். அண்மைக்காலத்தில் இந்தியாவில் இத்தகைய பல நீதிமன்றத் தலையீடுகளை - நியாயம் தேடும் நடவடிக்கைகளை - நாம் காணும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. சிவில் நிர்வாகத்தைத் தானாகவே தலையிட்டு நேர்சீராக்கும் நீதிமன்றங்களின் - நீதித்துறையின் - மறுமலர்ச்சிப்போக்கு இதுவென்று அங்கு பலராலும் வியந்து பாராட்டப்பட்ட ஒரு செல்நெறி அது.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை சட்டம், ஒழுங்கு எப்போதோ குழம்பிப்போய்விட்டது. மீண்டும் நீதிமன்றங்கள் மெள்ளமெள்ள இயங்கத் தொடங்கியதை அடுத்து, சட்டத்தையும் ஒழுங்கையும் மீள அதன் தடத்தில் நிலைநிறுத்துவதற்கான முயற்சி பலதரப்புகளிலும் எடுக்கப்பட்டன; எடுக்கப்பட்டுவருகின்றன.

அப்போது எதிர்நோக்கப்படும் தடைகளைத் தாண்டி முன்னேறுவதற்கு நீதித்துறை பல நெருக்குதல்களை எதிர்கொள்ளவேண்டி இருந்தது; எதிர்கொள்ளவேண்டி இருக்கின்றது.

சிவில் நிர்வாகத்தின் ஒத்துழைப்பின்மை, அரசியல் அழுத்தங்கள், எந்தப் பிரச்சினைக்கும் யுத்தம் காரணம் என்று யுத்தத்தின்மீதும் அதில் ஈடுபடுவோர்மீதும் பழி சுமத்திவிட்டு குற்றவாளிகளும் குற்றத்திற்கு உடந்தையாளர்களும் தப்பிக்கொள்ளுதல் - போன்றவை அவற்றுள் சில.

அவற்றையும் மீறி சட்டத்தையும் ஒழுங்கையும் அதற்குரிய தடத்தில் நிலைநிறுத்தும் முயற்சிகள் வவுனியா நீதிவானினால் முன்னின்று மேற்கொள்ளப்பட்டன. யாழ். நீதிவானும் அதே போன்ற சிரத்தையை - பொது மக்களைப் பாதிக்கும் விடயங்களில் - காட்டிவருவது நம்பிக்கை தருவதாகவுள்ளது.

யுத்தத்தையும் அதில் ஈடுபடுவோரையும் காரணங்காட்டி பொருள்களை அதிகவிலைக்கு விற்று, கொள்ளை இலாபம் அடிப்போர், பதுக்குவோர் போன்ற பெரும் முதலைகளின் பக்கமும் நீதிமன்றின் கவனம் திரும்பவேண்டும்.

நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்படப்போகின்றது என்ற எதிர்பார்ப்பிலிருக்கும் மக்களை விசனத்தில் ஆழ்த்தி, சமாதானம் பற்றிய மக்களின் நல்லுணர்வைக் குழப்பும் இத்தகைய 'கொள்ளையர்களை' கம்பிகளின் பின்னால் நிறுத்துவதும் நீதிமன்றங்களின் கடமையாகுகின்றது.

# வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் சித்திரைப் புத்தாண்டுக்கு முன் முடியும்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.13

வரவு - செலவுத்திட்ட விவாததை தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன் நடத்தி முடித்துவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தூதுக்குழு ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுநடத்தியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

மிகவும் குறைந்த நாள்களில் வரவு - செலவுத்திட்ட விவாதத்தை நடத்தி முடிக்கவேண்டியிருப்பதால் மார்ச் மாதம் முதல்வாரத்தில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பொருள்களினது விலைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான குழு ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இந்தக்குழு தீவிரமாகச் செயற்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## நாட்டு நடப்பு

### புகுந்தனன் வெறுங்கையோடு!

பொல்லுடன் கொள்கலனும் கொண்டு
பொழுததும் புலர முன்னே
அல்லற்பட்டு இடம்பிடித்து
அடுக்கியே கலனை வைக்க
பொல்லாத குமரொன்று பூந்து
பொறுப்பின்றி இடித்து வீழ்த்த
பொல்லொடு கலனும் விட்டு
புகுந்தனன் வெறுங்கை ஓடு.

- *விகடகவி.*

# இலங்கையில் சூரியசக்தி மின்வலு முதலாவது உற்பத்தி நிலையம் திறப்பு!

கொழும்பு,ஜன.13

இலங்கையின் முதலாவது சூரிய சக்தி மின்வலு உற்பத்தி நிலையம் பத்தரமுல்லையில் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மின் உற்பத்தி நிலையத்தை எரிபொருள், மின்வலு அமைச்சர் கருஜயசூரிய நேற்றுமுன்தினம் திறந்துவைத்தார்.

இதன் மூலம் தேசிய மின்சக்தி நிலையத்துக்கு மேலும் நூறு கிலோ வாற்ஸ் மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'வேல்ட் வியூ லங்கா' நிறுவனத்தினால் அமைக்கப்பட்டிருக்கும் இந்த மின் உற்பத்தி நிலையத்தைத் திறந்துவைத்து அமைச்சர் கருஜய சூரிய உரையாற்றுகையில் கூறியதாவது:-

அரசு மின்சாரப் பிரச்சினையை ஒரு தேசியப் பிரச்சினையாகக் கருதுகின்றது. நாடுமுழுவதும் தற்போது இருநூறு மெகா வாட்ஸ் மின்சாரத்துக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது. தனியார் துறையினரின் உதவியுடன் இந்தப் பற்றாக்குறை விரைவில் தீர்த்துவைக்கப்படும்.

தற்போது திறந்து வைக்கப்பட்டிருக்கும் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையமூலம் 2லட்சம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கமுடியும் - என்றார். (க-4-ரி)

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பொங்கல் விழா தலைமைக் காரியாலயத்தில் ஆணையாளர் கே.சுந்தரேசன் தலைமையில் நாளை காலை இடம்பெறும்.

இவ்விழாவில் யாழ்.மாவட்ட விவசாய சம்மேளன விவசாயிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-180)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.13

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் பொங்கல் விழா நாளை காலை சம்பிரதாய முறைப்படி சங்கத் தலைவர் சசிதரன் தலைமையில் இடம்பெறும். விசேட நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.13

நெல்லியடி சனசமூக நிலையத்தின் தைப்பொங்கல் விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கரும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.சிவபுண்ணியமும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.சேதுராஜாவும் கலந்துகொள்வர். (ம-31)

# அல்லாரை தமிழ்க் கலவன் பாடசாலை புதன்முதல் மீண்டும் சொந்த இடத்தில்

சாவகச்சேரி,ஜன.13

அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர்வரும் புதன் தொடக்கம் அதன் சொந்தஇடத்தில் இயங்கவுள்ளது.

இப்பாடசாலை இடம்பெயர்ந்து பொலிகண்டியில் உள்ள தனியார் கல்வி நிலையமொன்றில் இயங்கி வந்தது. தற்பொழுது அல்லாரை, மீசாலை கிழக்குப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்ந்துவருவதை அடுத்து இப்பாடசாலை மீண்டும் சொந்தஇடத்தில் இயங்கவுள்ளது.

பாடசாலைக்குரிய தளபாடங்கள், ஆவணங்கள் யாவும் நேற்றுமுன்தினம் வடமராட்சியிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டது.

இப்பாடசாலை மீள ஆரம்பிப்பதையடுத்து, பாடசாலையில் கல்வி பயின்ற மற்றும் தற்போது பயிலும் மாணவர்களது பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் சேர்ந்து சிரமதானமூலம் பாடசாலை வளவு மற்றும சூழல் பகுதிகளைத் துப்புரவு செய்தனர் எனப் பாடசாலை அதிபர் திருமதி சு. ஜெயக்குமார் தெரிவித்தார். (ம-31)

## வடமராட்சியில் வயிற்றோட்ட நோய் பரவுகின்றது!

தென்மராட்சி,ஜன.13

வடமராட்சிப் பகுதியில் பெருவெள்ளம் ஏற்பட்டதையடுத்து அண்மைக் காலமாக வயிற்றோட்ட நோய் சிறு குழந்தைகளைத் தாக்கிவருகின்றது. வயிற்றோட்ட நோயினால், இதுவரை பத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் பாதிக்கப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-117)

# பேச்சுக்கு முன் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்

## தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.13

சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, அவர்கள் யாழ்ப்பாணம் உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் சுதந்திரமாக நடமாடும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றது யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவர் ஒன்றியம்.

இதுகுறித்து மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் போரிடும் இருதரப்பும் பேச்சுக்கு உகந்ததான பதற்றமற்ற சூழலைப் பேணி வருகின்றன. ஆனால் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் புதிய அரசினால் குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும் என எதிர்பார்த்து நிற்கும் மக்களின் நம்பிக்கையை வீணாகிக்கொண்டிருக்கின்றது.

பேச்சுமூலம் தீர்வுகாண்போம் எனக் கூறிக்கொண்டு ஆட்சிப்பீடம் ஏறியுள்ள புதிய அரசானது முதலில் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் தமிழ் மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவேண்டும். ஏனெனில் பேச்சுமூலம் காலத்தை இழுத்தடிப்பது இராணுவ நடவடிக்கைத் தயாரிப்புக்களை மேற்கொண்டு தமிழர் தரப்பை பலவீனப்படுத்த முயன்ற முன்னைய ஆட்சியாளர்களின உபாயத்தையே பின்பற்றுவதாக எண்ணத்தோன்றுகின்றது.

எனவே புதிய அரசு -

☆ இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள்மீது விதிக்கப்பட்டுள்ள சகல தடைகளும் நீக்கப்படவேண்டும்.

☆ சட்டவிரோத தமிழ் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும்.

☆ இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகள், கைதுகள் போன்ற கெடுபிடிகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

☆ சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு, சிறைகளில் உள்ள அப்பாவித் தமிழ் மக்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவதுடன், இவர்களது கைதுகளை சட்டரீதியானதாக்கும் அவசரகால, பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டும்.

☆ வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மக்கள் வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள அரசபடைகளும், தமிழ் ஆயுதக்குழுக்களும் வெளியேற்றப்பட்டு, அவை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன், கடல் வலயத் தடையும் முற்றாக நீக்கப்படவேண்டும்.

இவை போன்ற அன்றாடப் பிரச்சினைகளை உடன் களைந்துவிட்டு தமிழர் தரப்புடன் பேச்சு நடத்துவதே ஆரோக்கியமானதாகக் கருதப்படும் - என்று அதில் உள்ளது. (ம-7)

## நாளை

தை 1
திங்கட்கிழமை
(14-01-2002)
திதி : பிரதமை
முன்னிரவு 8.16 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
பிற்பகல் 3.50 வரை.
தமிழர் தைப்பொங்கல் திருநாள்
சுபநேரம் : 12.04 - 1.34
ராகுகாலம் : 8.04 - 9.34
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

வீண் பேச்சை நச்சுப் பாம்புபோன்று விலக்கிவிடு.

# பேச்சுக்களை இந்தியாவில் நடத்த எமக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை

## அமைச்சர் டிரோன் கூறுகிறார்

கொழும்பு,ஜன.13

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை இந்தியாவில் நடத்துவதில் அரசாங்கத்துக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை. ஆனாலும் பேச்சுக்களை இந்தியாவில் நடத்துவதற்கு இந்திய அரசு சம்மதிக்குமா என்பது சந்தேகமே.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

பேச்சுக்கள் எங்கு நடைபெற வேண்டும் என்பதை புலிகள் தீர்மானிப்பதில் எமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. தென்னிந்திய நகரம் ஒன்றில் பேச்சு நடத்தப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை இந்தியா ஏற்றுக்கொள்ளுமா என்பதே இங்கு கூர்ந்து கவனிக்கப்படவேண்டிய விடயமாகும் - என்றார். (ம-4)

### இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள ஏற்பாட்டில்

# பொங்கலன்று இடம்பெற இருந்த போட்டிகள் நேற்றே நடந்துமுடிந்தன

வலி.வடக்கு,ஜன.13

பொங்கல் விழாவையொட்டி பொங்கல் தினமான நாளை திங்கட்கிழமை இந்துசமய கலாசார அமைச்சின் அனுசரணையுடன் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படவிருந்த பாரம்பரிய விளையாட்டுக்கள் நேற்றையதினமே நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடத்திமுடிக்கப்பட்டன.

யாழ். மாவட்ட மேலதிக அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் இவை இடம்பெற்றன.

வலி.வடக்கு வடமலை இராசதுரை குழுவினரின் சிலம்பு விளையாட்டு, பருத்தியூர் மகாதேவா குழுவினரின் கரலாக்கட்டை விளையாட்டு மற்றும் பெண்களுக்கான சுமடிப் போட்டி, தாச்சிப் போட்டி என்பனவும் நேற்று இடம்பெற்றன.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் வழங்கிக் கௌரவித்தார்.

இப்போட்டிகள் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தால் ஒளிப்பதிவு செய்யப்பட்டன. பொங்கல் திருநாள் அன்று அவை ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## திருவாசக விழா நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.13

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்திவரும் திருவாசக விழாவின் நிறைவுதின நிகழ்வுகள் இன்று அதிகாலை 5 மணிமுதல் யாழ்கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள மன்ற அலுவலகத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுகளில் திருவாசகம், திருக்கோவையார் என்பன முற்றும் ஓதல் இடம்பெறும். (ம-7)

## திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடனும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்.... ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo-13.
T.P.No.01 433182, 472582.

(95982)


## 45ஆம் நாள் நினைவலைகள்

எமது சக மாணவன்
ப.மணிவண்ணன் அவர்களின்
அன்புத் தந்தையாராகிய

**கந்தையா பன்னிருகரம்**

அவர்கள் 30.12.2001இல் அமரத்துவம் அடைந்தமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

யாழ்.பல்கலைக்கழகம்,
மெய்யியல் சிறப்புக்கலை
இறுதி வருட மாணவர்கள்.

(96985)

## ஓராண்டு நினைவு தினம்

தோற்றம் 1912 - 10 - 18



மறைவு 2000 - 12 - 25

### அமரர் கார்த்திகேசு ஆறுமுகம்

திதி: 13-01-2002

*அன்னையாய் தந்தையாய் - நல்*
*ஆசானாய் இருந்து*
*எம்மையெல்லாம் காத்து*
*வழிநடத்திய அன்புத் தெய்வமே!*
*ஆண்டொன்று மறைந்தாலும்*
*மறந்திடுமோ உம் நினைவு.*

*32, இராஜசிங்கம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 1932 - 02 - 05



ஆண்டவன் மடியில் 2001 - 12 - 16

### அமரர் கந்தப்பு கந்தசாமி

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இலங்கை துறைமுக அதிகார சபை - காரைநகர்)*

பண்பும் பக்தியும் நிறைந்த பணிவுடன் வாழ்ந்து சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைந்த செய்திகேட்டு உடன்வந்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், இரங்கற்செய்தி தெரிவித்தோர், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டோர் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (13-01-2002) ஞாயிற்றுக்கிழமை அவரது ஆத்மசாந்தி வேண்டி நடைபெறும் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கோணாமலை லேன்,*
*திருநெல்வேலி.*

(96926) - குடும்பத்தினர்.

## பாடசாலை முகட்டு ஓடுகள் திருட்டு!

வலி.வடக்கு ஜன.13

மருதனார்மடம் சந்தியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் முகட்டு ஓடுகள் சில திருடப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்து தற்காலிக கொட்டகையில் இயங்கிவரும் இப்பாடசாலையிலேயே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-86)

## தெய்வீக இசை அரங்கின் இறுதிநாள் நிகழ்வு

வலி.வடக்கு ஜன.13

மருதனார்மடம், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஆலய தெய்வீக இசை அரங்கு இறுதிநாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

ஓய்வுபெற்ற அதிபர் பிரம்மஸ்ரீ சிவசரவணபவன் (சிற்பி) மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்.

எம்எஸ்சுந்தர் அவர்களின் வீணை இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (ம-86)

## ஆங்கில ஆசிரியருக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இளைப்பாறிய பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் மூலம் சேகரிக்கப்படும் விவரங்களை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரிடம் அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால் சம்பந்தப்பட்டோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பாக கல்வி வலயத்தின் ஆசிரிய நிர்வாகக் கிளையில் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மரவேலை பயிற்சி போதனாசிரியர் வெற்றிடம்

நவாலி,ஜன.13

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் மரவேலைப் பயிற்சிக்கு, போதனாசிரியருக்கான பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்ற சான்றிதழ், தொழில் அனுபவம் போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு ஸ்ரீலங்கா தொழிற்பயிற்சி அதிகாரசபை கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் முன்பாக, சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும் என அதன் போதனாசிரியர் வே. ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (ம-100)

## தொடர்புகொள்ள கோரிக்கை

நவாலி ஜன.13

ஸ்ரீலங்கா தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படும் மின் இணைப்பு பயிற்சியில் சான்றிதழ் பெற்றோர் மேலதிக பயிற்சியை தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பெறுவதற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு அதன் போதனாசிரியர் வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (ம-100)


## தேவை

ஆண், பெண், சிறுவர்,
சிறுமியர்க்கான ஆடைகள்
தைப்பதில் அனுபவம்
உள்ளவர்கள் தேவை.

**ஜோய் ரெக்ஸ்,**
இல.91, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (96951)


## முதலாவது பிறந்தநாள்

HAPPY



BIRTHDAY

### நித்தியானந்தன் மகிஷாயினி

திருநெல்வேலியைச் சேர்ந்த
நித்தியானந்தன் (கிராம உத்தியோகத்தர், திருநெல்வேலி) - கிருஸ்ணவதனி (ஆசிரியை சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்) தம்பதிகளின் செல்வப் புதல்வி

**மகிஷாயினி**

தனது பிறந்தநாளை இன்று (13.01.2002) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அந்த இடத்தைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, அத்தை, மாமா, இந்தியாவில் உள்ள ரேணு அத்தை, கொழும்பில் உள்ள அம்மம்மா, மாமா, கனடாவில் உள்ள சித்தப்பா, சித்தி, சின்னமாமா, கனடாவில் உள்ள மாமாமார், தாத்தா, பாட்டி ஆகியோர் பல்லாண்டு காலம் பல்கலையும் பெற்று இராக்குச்சி அம்மன் துணையுடன் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*அம்மன் வீதி, திருநெல்வேலி.* (96874) - குடும்பத்தினர்.


## வெளிவந்துவிட்டது!

நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த
**2002ஆம் ஆண்டு**
அஷ்டலக்ஷ்மி தினக்கலண்டர்
**மாதக்கலண்டர்.**
***தினக் கலண்டருடன்***
***2002ஆம் ஆண்டுப் பலன் புத்தகம்***

**இலவசம்**

கேட்டு வாங்குங்கள். வாங்க முந்துங்கள். கையிருப்புவரை கிடைக்கும்.

320,செட்டியார் தெரு,
கொழும்பு.
T.P.: 334004

(96940)

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,
*424C, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 29 - 04 - 1941
இறப்பு 14 - 12 - 2001

### அமரர் நாகலிங்கம் முருகவேள்

எமது சக மாணவன் மு.சுரேஸ்வரன் அவர்களின் தந்தையாரின் இழப்பால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதேநேரம் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

*3ஆம் வருடம்*
*சமூகவியல் சிறப்புக்கலை மாணவர்கள்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

(96955)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 01 - 1944



மறைவு 18 - 12 - 1998

அமரர்

### சின்னப்பொடி நல்லதம்பி

*(திரவியம்)*

திதி:-அமாவாசை இன்று 13.01.2002

ஆண்டுகள் மூன்று ஆயிடினும் அன்புமுகம் மறக்கவில்லை
ஈண்டு உம் நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்!
தூண்டாமணி விளக்காய் ஒளி வீசிப் பிரகாசித்தீர்! இன்று
வேண்டித் துதித்தே நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

*சாந்தா தோட்டம்,*
*ஆவரங்கால்,*
*புத்தூர்.*

(96993)

# குடாநாட்டுக்குத் தேவையான உரவகைகள் விரைவில் வரும்

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.மாவட்ட விவசாயிகளின் தேவைக்கென கொழும்பிலிருந்து உரவகைகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பன கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ளன.

ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா, 150 மெற்றிக்தொன் வீ-1 ரக உரம், 100 மெற்றிக்தொன் ரி.டி.எம். போன்ற உரவகைகளும் -

சீடாத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் வழங்கவென 200 நீர் இறைக்கும் இயந்திரங்களும் -

எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பொருள்கள் யாவும் நவம்பர் மாதமே கொள்வனவு செய்யப்பட்டு விட்டதாகவும் -

நவம்பர் மாதம் பாதுகாப்பு அனுமதி கிடைக்காத காரணத்தினாலேயே பொருள்களை உடன் எடுத்துவர முடியவில்லை எனவும் -

இதனையடுத்து இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனோடு தாம் தொடர்புகொண்டபோது அமைச்சர் உரிய அமைச்சுடன் பேசி அனுமதியினைப் பெற்றுத்தந்தார் எனவும் -

இம்மாத இறுதிக்குள் இந்த உரவகைகள் கப்பல் மூலம் வந்துசேரும் எனவும் -

யாழ்.மாவட்ட கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் கே.சுந்தரேசன் தெரிவித்தார். (ம-180)

## நகரில் நேற்று சுவரொட்டிகள்

வலி.வடக்கு,ஜன.13

யாழ்ப்பாணத்தில் அதிக விலையில் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளை எச்சரிக்கை செய்யும் சுவரொட்டிகள் யாழ்நகரில் ஒட்டப்பட்டுள்ளன.

'இளைஞர்களே! எதிர்காலச் சந்ததியினரே சிந்தியுங்கள்' என்ற தலைப்பில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'இளைஞர்களே! உங்களுக்குள் தேவையற்ற முறையில் வாள்வெட்டுக்களில் ஈடுபடுவதிலும்பார்க்க மக்களுக்காகப் பாடுபடுங்கள்' எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையான மக்கள் இந்தச் சுவரொட்டிகளைப் பார்வையிட்டனர். (ம-86)

# இந்தியத் தூதுவருடன் நாணயக்கார சந்திப்பு

## பேச்சுக்களை அங்கு நடத்தவும் வலியுறுத்து

கொழும்பு,ஜன.13

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை இந்தியாவில் நடத்துவதற்கு இந்திய அரசு அனுமதியளிக்க வேண்டும் என்று காணாமற்போன படையினரின் பாதுகாவலர் சங்கம் நேற்று முன்தினம் இந்தியத்தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதுகாவலர் சங்கத் தலைவர் நாணயக்கார தலைமையிலான குழுவினர் இந்தியத் தூதருடன் சுமார் ஒன்றரை மணி நேரம் பேச்சு நடத்தினர்.

இருதரப்பினரதும் விருப்பப்படி இந்தப் பேச்சுக்களை தென்னிந்திய நகரம் ஒன்றில் நடத்துவதற்கு இந்திய அரசு தனது பூரண சம்மதத்தை வழங்கவேண்டும் என்றும் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர். (க-4)

### கடற்புலிகளின் செயற்பாடுகளைத் தடுப்பது குறித்து

# இலங்கை-இந்திய அதிகாரிகள் புதுடில்லியில் உயர்மட்டப் பேச்சு

புதுடில்லி,ஜன.13

கடற்புலிகளின் நடமாட்டம் மற்றும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இலங்கை, இந்திய கடற்படை உயர்மட்ட அதிகாரிகள் புதுடில்லியில் பேச்சு நடத்தியுள்ளனர்.

ரியல் அட்மிரல் ஒருவர் தலைமையில் கடந்த திங்களன்று புதுடில்லி சென்ற இலங்கைக் கடற்படை அதிகாரிகள் குழு மூன்று நாள் பேச்சுக்களில் கலந்துகொண்டது.

பாக்குநீரிணைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் அனைத்து நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்துவது தொடர்பாக இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்பட்டதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களின் வருகையைத் தடுத்து நிறுத்துவதற்காக இரண்டு நாடுகளின் கடற்படையினரும் கூட்டாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றும் - இந்தப் பேச்சுக்களில் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (க-7)

# மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகள்

## 'கியூடெக்'கின் மகளிர் அமைப்பு நடத்துகிறது

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'கியூடெக்' நிறுவனத்தின் மகளிர் அமைப்பு பாடசாலை மாணவர்களுக்கு இடையில் கட்டுரை மற்றும் சுவரொட்டிப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கட்டுரைப் போட்டியில் 8ஆம், 9ஆம், 10 ஆம் ஆண்டு மாணவர்கள் பங்குபற்றமுடியும். 'மகளிர் - புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புதல்' என்ற கருப்பொருளில் 250 சொற்களைக் கொண்டதாகக் கட்டுரை அமையவேண்டும் என்றும் -

'மகளிருக்கு எதிரான வன்முறைகள்' என்ற கருப்பொருளை மையமாகக்கொண்டு சுவரொட்டிகள் வரையப்படவேண்டும் எனவும் -

சுவரொட்டிப் போட்டியில் 11ஆம், 12ஆம், 13ஆம் ஆண்டு மாணவர்கள் பங்குபற்றமுடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மாணவர்களின் ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் 'கியூடெக்', இல.14, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-6-8)



வடமராட்சி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நடத்தப்பட்ட ஓய்வுபெற்ற தலைவர்கள் கௌரவிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட விவசாய சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஓய்வுபெற்ற தலைவர் ஒருவருக்கு தங்கப்பதக்கம் அணிவிக்கின்றார். அருகில் சமாசத்தின் தலைவர் க.மெய்யழகன் அவர்களும் காணப்படுகின்றார். (ஐ)

## கலாசாரப் பேரவைக்கு உபகரணங்கள் கொள்வனவு!

வடமராட்சி,ஜன.13

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கலாசாரப் பேரவை கலாசார நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தவென பல்வேறு உபகரணங்களை 5லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்துள்ளது.

ஒலிபெருக்கி, ஜெனரேட்டர், பந்தல், மணவறை, பாய்கள், கதிரைகள், இசைக்கருவிகள் என்பன இந்த உபகரணங்களில் அடங்கியுள்ளன.

இதற்கான நிதியை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை வழங்கியிருந்தது.

இந்த உபகரணங்கள் இப்பிரிவில் வதியும் பொதுமக்களின் தேவைகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கப்படும் என வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.(ம-173-182)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் பனடோல் தட்டுப்பாடு

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் பனடோல் குளிசைகளுக்கும், மருந்து கட்டுவதற்குரிய பன்டேஜ், பிளாஸ்ரர் ஆகியவற்றிற்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதேவேளை - இவ்வைத்தியசாலையில் சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் தொகை மிகவும் அதிகரித்துள்ளது. (ம-135)

## உழவர் விழா

சண்டிலிப்பாய்,ஜன.13

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் இவ் வருடத்திற்கான உழவர் விழா பொங்கல் தினத்தன்று நண்பகல் நடைபெறவுள்ளது. கழகத் தலைவர் சண்.லவக்குமார் தலைமையில் அராலி தெற்கிலுள்ள மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினராக வலி.மேற்கு (சங்கானை) உதவி அரசாங்க அதிபர் செ.இரத்தினம் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் சி.க.சிற்றம்பலம், வானொலி நாடக எழுத்தாளர் அராலியூர்.ந.சுந்தரம்பிள்ளை, யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஜே.ரூபசிங்கம், வலி.மேற்கு பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி தவராசா சந்திரமதி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

இவ்விழாவில் கைக்கொடி மாட்டுச் சவாரிப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிள் ஓட்டப் போட்டி, வலைப்பந்தாட்டப் போட்டி, உதைபந்தாட்டப் போட்டி ஆகியன உட்பட மற்றும் பல போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ம-135)



குடாநாட்டில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு தொடர்கின்றது. எரிபொருள் நிலையங்களில் மக்கள் எண்ணெய்ப் பரல்களுடன் மண்ணெண்ணெய் பெறுவதற்காக முண்டியடித்து வருகின்றனர். யாழ்.நகரின் மத்தியில் உள்ள எரிபொருள் நிலையம் ஒன்றில் நேற்றுத் திரண்டு காணப்பட்ட மக்களில் ஒரு பகுதியினரையே இங்கு காண்கிறீர்கள்.
*(படம்: பொ.இராஜேஸ்வரன்)*

# காணாமற்போன படையினரின் உறவினர்கள் மடுவுக்கு யாத்திரை

## எதிர்வரும் 19 ஆம் திகதி புறப்படுவர்

கொழும்பு,ஜன.13

காணாமற்போன படையினர் சங்க உறுப்பினர்கள் அடங்கிய 3000 ஆயிரம் பேர் கொண்ட குழு ஒன்று இம்மாதம் 19 ஆம் திகதி சாம விகாரையில் இருந்து மடுத் தேவாலயத்துக்கு சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக காணாமற்போன படையினர் சங்கத்தின் செயலாளர் ஈ.பீ.நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சங்க உறுப்பினர்கள் ஆயிரத்து 880 பேர் உட்பட மேலும் பல பிரதிநிதிகளுடன் இச்சமாதான யாத்திரையை மேற்கொள்ளவுள்ளோம். எதிர்வரும் 21 ஆம் திகதி வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து நாட்டில் சமாதானம் ஏற்படுவதன் அவசியம் பற்றிப் பேசவும் திட்டமிட்டுள்ளோம். இராணுவத்தில் கடமையாற்றி புலிகளால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் எமது பிள்ளைகளின் விடுதலைபற்றி அவர்களுடன் கலந்துரையாடுவதே எமது பயணத்தின் முக்கிய நோக்கம்.

வன்னியில் எமக்குத் தேவையான வசதிகளை விடுதலைப் புலிகள் செய்துகொடுப்பதாக உறுதியளித்துள்ளனர். நாடு முழுவதிலும் சமாதானம் நிலைக்கவேண்டும் என விரும்பியோர் மற்றும் பொது அமைப்புகள் இச் சமாதான யாத்திரையில் இணைந்து கொள்ள முடியும் என்று ஈ.பீ.நாணயக்கார மேலும் தெரிவித்தார். (ம-8)

## தையல், மனையியல் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

சண்டிலிப்பாய்,ஜன.13

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.வடக்கு பிரதேச செயலகம் நடத்தும் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் மற்றும் மனைப்பொருளியல் பயிற்சி நெறி எதிர்வரும் 18ஆம் திகதி அளவெட்டி வடக்கிலுள்ள கட்டடம் ஒன்றில் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு 55யுவதிகள் விண்ணப்பித்திருப்பதாகவும், எதிர்வரும் 17ஆம் திகதியன்று இவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு 35 பேர் இப்பயிற்சிக்கு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் வலி.வடக்கு பிரதேச செயலக பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கலைமகள் சிவராஜா தெரிவித்தார். (ம-135)

### அடுத்த மாதம்முதல்

# களுத்துறைக் கைதிகள் உண்ணாவிரதப் போர்!

கொழும்பு,ஜன.13

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

இம்மாத இறுதிக்குள் தமது விடுதலை தொடர்பாக அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் -

அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் - அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோருக்கும் கைதிகள் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர். (ம-4)

### வடமராட்சிப் பகுதியில்

# நலன்புரி நிலையங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது தமக்குத் தெரியாதாம்

## யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி தெரிவிப்பு

தென்மராட்சி,ஜன.13

வடமராட்சிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் அண்மையில் பெய்த பெருவெள்ளத்தில் மூழ்கியுள்ளது குறித்தும் -

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் எதுவும் கிடைக்காத நிலையில், பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் தங்கியிருப்பது குறித்தும் -

எந்தவோர் அதிகாரியும் தமக்கு இதுவரை அறிவிக்கவில்லையென அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதுவராலயப் பிரதிநிதி தெரிவித்தார்.

கரவெட்டிப் பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் சாவகச்சேரி நகர மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் இது குறித்து முறையிட்டதையடுத்து, முகாம் பகுதிக்குச் சென்று கொட்டில்களைப் பார்வையிட்ட பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெள்ளம் தேங்கி நின்ற கொட்டில்களின் நிலம் சகதியாகக் காணப்படுகின்ற போதிலும், மக்கள் சிரமங்களின் மத்தியில் அங்கு தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## நகரின் மத்தியில் காவலரண் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாகவுள்ள இராணுவ காவலரண் நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரணே படையினரின் பயன்பாட்டிற்கு இடப்பற்றாக்குறை ஏற்படுவதாகக் கூறி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைக்குரிய மரத் தளபாட வகைகள், கடைப் பாவனைக குரிய மரத்தளபாட வகைகள், 8X8 கண்ணாடி சோக்கேஸ் முற்றாக முதிரைப பலகையில் உருமாற்றுச் செய்யப்பட்டது. மேலாகவும், கீழாகவும் இரண்டாகப் பிரித்துப் பாவிக்கக்கூடியதும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கந்தையா சர்வானந்தன், புத்தூர் வடக்கு, நவக்கிரி, புத்தூர். (96822)

தரம் 11இற்குரிய புதிய பாடத் திட்டத்துக்கு அமைவான வணிகக் கல்வியும் கணக்கீடும் நூல் விற்பனையாகின்றது. ஆசிரியர்: இ.இரகுநாதன் B.B.A. Dip. in Ed. (97020)

A/L பொருளியல் நூல்களான பொருளாதார வளர்ச்சி, வெளிவாரி விளைவுகள், பேரினப் பொருளாதாரம், பணம், சர்வதேச வர்த்தகம், நாணய மாற்றுவீதம் போன்றன விற்பனையாகின்றன. ஆசிரியர்: வே.கருணாகரன். (97021)

சொனி ரீ.வி. 2192, 2197, 2093 ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.59, சிவன் புது வீதி, நல்லூர். (97004)

## தைப்புத்தாண்டு வெளியீடுகள்

ராகு கேது மாற்ற புத்தகம் எங்கும் விற்பனையாகிறது. (ஜீவன்-பிரம்ம ஐக்கிய வேதாந்த இரகசியம் நூல் அறிமுகம் அடங்கியது.) விலை 12/-. எழுதியவர்: Prof. சத்தியதாஸன் (சத்யா) 3ஆம் மைல் ஆனைக்கோட்டை. T.P.: 021 - 2753. (97036)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர்(1 kg 140/-), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். 2 மாதம் நிரம்பிய சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. S.கண்ணா, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (96850)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (96844)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (96841)

## சங்கீதம்

கிருஷ்ணவேணி மயில்வாகனம் அவர்களால் ஆக்கப்பட்ட G.C.E.(O/L) கர்நாடக சங்கீதப் புத்தகம் வெளிவந்துவிட்டது. வட.இலங்கைச சங்கீத சபைப் பரீட்சைக்கு ஏற்ற பல விடயங்களும் அறிமுறை, செய்முறை விடயங்களுடன் 6 வருட வினா-விடைகளும் அடங்கியுள்ளன. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். (96931)

## ஆங்கிலம்

தரம் 9,10,A/L 2003, 2004 வகுப்புகளுக்கான ஆங்கில வகுப்புகள் 18.01.2002இல் ஆரம்பம். க.நாகேந்திரம், இல.34/4, செட்டித்தெரு, நல்லூர். (96891)

## தவறிவிட்டது

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த மாயவன் இராசதுரை என்பவருடைய தே.அ.அ.(இல.682903171V), விசேட அ.அ. என்பன ஊரெழுவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வீடியோ சிந்து, உரும்பிராய்ச் சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (97022)

## தேவை

கௌரவமான சிறிய குடும்பத்திற்கு ஏற்றதாக நீர், மின்சார வசதிகளுடன் கொக்குவில், கோண்டாவில், தாவடி பகுதிகளில் ஒரு வீடு வாடகைக்குத் தேவை. விள.இல.1434, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (97031)

## மணமகள் தேவை

1962இல் பிறந்த, கத்தோலிக்க சமய, கொழும்பில் எஞ்ஜினியராகத் தொழில்புரியும் மணமகனுக்குத் தகுந்த A/L படித்த, அழகான, நற்குணமுள்ள மணப்பெண் தேவை. சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விள.இல.1433, மே/பா உதயன். (97010)

---

# பெண் நிருபர்கள் தேவை

மகளிர் அபிவிருத்தி நிலையமும் அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிய (யூ.என்.எச்.சீ.ஆர்.) நிறுவனமும் இணைந்து நடத்தவுள்ள அனைத்துலக மகளிர் தினத்தையொட்டிய நிகழ்வாக (மார்ச் 8ஆம் திகதி) பெண் பத்திரிகை நிருபர்களை இனங்காணும் பணி இடம்பெறவுள்ளது.

பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்தி செய்திகள் சேகரித்துப் பத்திரிகைக்கு வழங்கவல்ல பெண் நிருபர்கள் இப்பணிக்குத் தேவைப்படுகின்றனர்.

ஆர்வமுள்ளோர் 19, அரசடி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் எதிர்வரும் (17.01.2002) வியாழக்கிழமை அன்று பிற்பகல்2.00 மணிக்கு இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர்.

*யாழ்ப்பாணம்.* (97032)

- நிர்வாகி,
*மகளிர் அபிவிருத்தி நிலையம்.*

---

# இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை

## தற்காலிக இடம்மாற்றம்

யாழ்நகரில் இயங்கிவந்த சாவகச்சேரி கிளை தற்காலிகமாக வல்லை வீதி, அச்சுவேலியில் அமைந்துள்ள கட்டடத்தில் எதிர்வரும் (15.01.2002) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் தனது கருமங்களை ஆரம்பிக்கும் என்பதை அறியத் தருகின்றோம்.

இக்கிளை
இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர்
**திருமதி க.துரைராசா** அவர்களால்
திறந்து வைக்கப்படும்.

பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி,
யாழ்.பிரதேசம்.

(C/20254)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 - 07 - 1933

மறைவு 13 - 01 - 2000

## அமரர் அ.ச.சத்தியநாதன்

13. 01. 2002

சராண்டு வந்ததுவா?
குணக்குன்றை நாம் இழந்து - இல்லை
இழந்தது அழியும் உடல்
இழக்காதது குணமென்னும் மனிதம்!
மனிதம் நிறைந்த குணத்தின் நினைவு
நெஞ்சிருக்கும் வரை நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
**திருமதி ச.சரோஜினிதேவி** (அன்பு மனைவி)

*அதிகார் செல்லமுத்து றோட், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.*

(96983)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 25 - 12 - 1941

ஆண்டவன் அடியில் 13 - 12 - 2001

## அமரர் முத்துச்சாமி துரைராஜா

*(மரக்கறி வியாபாரி - மீசாலை)*

13-01-2002

எண்ணற்ற நினைவுகளால் எம்மிதயம் வாடுதையா?
பண்பற்ற காலமன்றோ பறந்தனைநீ வானுலகு
கண்ணற்ற காலனுனைக் காவுகொண்டு போயிடினும்
மண்ணற்ற போதுமுந்தன் மாண்பகன்று போகாதையா!

*அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றம்,
மீசாலை.

(97000)

---

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி



## அமரர் நாகலிங்கம் முருகவேள்

மண்ணில் 29 - 04 - 1949

விண்ணில் 14 - 12 - 2001

நாள்கள் தான் நகர்ந்தன! நினைவுகள் நகரவில்லை!!
சோகங்களும் தான்! வாடகைக்கு வந்தது போல நிம்மதி
ஓடி விட்டது எப்போதோ? நிற்கும் வெறும் உயிரிலும்
நீயின்றி வேறில்லை!

எமது சக மாணவன் மு.சுரேஸ்வரனின அன்புத் தந்தையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் வருட மாணவர்கள்,
-கலைப்பீடம்.

*யாழ். பல்கலைக்கழகம்.* (96990)

---

# மனதாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்

கடந்த மாதம் நடைபெற்று முடிவடைந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலும் இரண்டாவது தடவையாகவும் வெற்றிபெற்று,



இந்து கலாசார அமைச்சராகப் பதவியேற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்,

கௌரவ

## தி.மகேஸ்வரன்

*அவர்களை*

மேலும் மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அங்கத்துவ வணிகர்கள்.
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

*நெல்லியடி, கரவெட்டி.*

(97025)

---

# சிறந்த கல்வியைப் பெறுவது ஒவ்வொரு சிறுவரினதும் உரிமையாகும்




கல்விபயிலும் உரிமை எல்லாப் பிள்ளைகளுக்கும் உண்டு. அரசாங்கத்தின் பொறுப்பு ஆரம்பக் கல்வியாவது கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைப்பதை உறுதிப்படுத்துதல ஆகும்.

கல்வியின் நோக்கம் பிள்ளையின் ஆளுமை, திறமை, உடல் மற்றும் உள ஆற்றல்கள் ஆகியவற்றை முழுமையாக விருத்திசெய்வதே ஆகும்.

சுதந்திரமான சமுதாயத்தில் பொறுப்புடனும், அமைதியுடனும் வாழ்வதற்கும் அத்துடன் அடிப்படை மனித உரிமைகள், தமது சொந்தக் கலாசார, தேசிய ஆசார சீலங்களை மட்டுமல்லாமல் பிறரின் விழுமியங்களையும் கனம பண்ணுவதற்கும் கல்வி சிறுவரைத் தயார் செய்கிறது.

க.செந்தூரன்
4ஆம் வருட மருத்துவ மாணவன்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களைப் பின்வரும் முகவரிக்குத் தெரியப்படுத்தவும்:

மாவட்டசிறுவர் பாதுகாப்புக் குழு
அறை 30, போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P.: 021-2261 EXT 274

(C/20259)

| | | | |
|---|---|---|---|
| செவ். | | சனி | வியா. ராகு |
| | இராசிச் சக்கரம் | | |
| புத. | | | |
| சூ. சந். வெ. கேது | | | |

*மாற்றம்:*

13.01.2002இல் பூராடம் - தனு ராசியில் சந்திரன் நிற்கும்.

14.01.2002இல் மகரத்தில் வெள்ளி மாறும்.

**அரசியல் பேச்சுவார்த்தைகள் தொடரும். ஆனால் சில தலைவர்களின் கருத்துக்கள் - மாறுபட்டிருக்கும். ஏமாற்றுவதும் ஏமாறுவதும் அதிககாலம் நீடிக்காது. நாடு சுபீட்சமடைவதை மக்கள் மனம் விரும்புகின்றது. ஆனால், அரசியல்வாதிகளிடையே விட்டுக்கொடுக்க விரும்பாத மனம் இருக்கின்றது. அரசியல் நடத்தும் சமயவாதிகள் அச்சமுட்டியபடி இருப்பர். இந்தியப்படை வட முனைநோக்கி நகரும். தென் முனையை அலட்சியம் செய்யும். தீவிரவாதிகளின் பயங்கர அழிவு தொடரும் மேற்குலகம் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளில் தன்னிலைப்பாட்டை ஆளுமைப்படுத்தும். பாகிஸ்தானுக்கு நல்லதல்ல - பசுபிக், இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் இயற்கை, செயற்கை அழிவுகள் தொடரும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.**

# இந்த வார இராசி பலன்

# 13.01.2002 ~ 19.01.2002

## மகாதேவா ஜோதிடம்

### மேடம்

மனித வாழ்வில் தவறுசெய்வது சகஜம். அதைத் திரும்பத்திரும்பச் செய்துவிட்டு நியாயப்படுத்துவது தான் தப்பு. தொழில் ஸ்தானத்தில் பல தப்புத்தாளங்கள் நடக்கும். இடமாற்றம், உடல் வருத்தத்தால் செலவுகள் - வருமானம் குறைதல், எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம், வழக்கு வெற்றி, சகோதர உதவிகள், மேலதிகாரிகளின் உதவிகள் கிடைத்தல் என்பன நடக்கும். தோல் வருத்தம், உஷ்ணபீடைகள், மனக் கோளாறு போன்றன ஏற்படும். மருந்துத்துறை, போக்குவரத்துத்துறை, குருத்துறை போன்றவர்களுக்குப் பலவித நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

### இடபம்

பொறாமையால் பெற்றோர், சகோதரர்களைச் சிலர் தூண்டிவிடுவார்கள். அதை நம்பிவிடுவது சிலரின் அறியாமையாகும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் கண்டிப்பார்கள். கீழ்ஊழியர்கள் அவமானப்படுத்துவார்கள். அழகுக்கு மயங்குதல், இடாம்பீகச் செலவு, பொதுத் தொண்டு, அரச அதிகாரிகளால் தொல்லைகள் என்பனவரும். சல வருத்தம், நாரிநோ, களைப்பு, வாய்வுத் தொல்லை என்பனவரும். சட்டத்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறையினர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

### மிதுனம்

நரம்புவியாதி உள்ளவர்கள் பலர் எம்மத்தியில் வாழுகின்றனர். அதற்குத் தகுந்ததுபோல் அவர்களை வாழவைப்பதுதான் முக்கியமாகும். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி கோபம் வரும். இடமாற்றங்களைச் செய்யவேண்டாம். எதிர்ப்பாலார் வேண்டாத பழியைச் சுமத்துவார்கள். வாதம், வாய்வு, அல்சர் நோய்கள் போன்றன ஏற்படும். விவசாயத்துறை, இராணுவத்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி நண்பகல்.*

### கடகம்

அன்புமனம் நட்பு, நம்பிக்கையை வளர்க்கும். பதவி வரும் - பறந்து போகும். அதை நம்பிவிடமுடியாத நிலை வேண்டும். தொழில்ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த நிலைமைகள் ஏற்படும். உணர்ச்சித்தொல்லை, பிறசர், மனப்பயம் என்பன ஏற்படும். சகோதர உதவிகளை உதாசீனம் செய்யாதீர்கள். அரசியற்றுறை, செயதித்துறை, புத்தகவியாபாரத்துறை, குருத்துறை போன்றவர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### சிங்கம்

குருவிடம் - சீடன் பக்தியுடன் ஆசீர்வாதம் வாங்குவதே இயல்பு. ஆனால் குருபீடத்தில் உள்ளவர்கள் தமது சுயநலத்திற்காகவும், பதவியைத் தக்கவைப்பதற்காகவும் சீடன் மேல் வீண்பழி சுமத்துவது என்ன நீதி? கடமையைச் சரிவரச்செய்யாத பலர் - இறை பூசைகளில், பொது வைபவங்களில் தம்மை பிரபல்யப்படுத்திவருவதை உலகம் கண்டு கொண்டுதான் இருக்கின்றது. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் மாறிமாறி வரும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தூர இடங்களிலிருந்து செய்திகள் வரும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள். நாரிநோ, கண்நோ, அடிக்கடி கோபம், உஷ்ணபீடைகள், சளித்தொல்லை என்பன வரும். போக்குவரத்துத்துறை, வியாபாரத்துறை, ரீ.வி. டெக்துறை, கம்பியூட்டர்துறை, மருந்துத்துறை, குருத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### கன்னி

ஒருவருக்கு ஒருவர் கொடுக்கும் பரிசுப்பொருள்கள் முக்கியமல்ல. கொடுக்கும் மனத்தின் பக்குவநிலையே முக்கியமாகும். தொழில் ஸ்தானத்தில் கோள் சொல்லுவார்கள். மனக் கஷ்டங்கள் வரும். வீடு - வாகன சுகம், மாற்றங்கள், இடைக்கிடை வீட்டில கலகலப்பு, புண்ணியச் செயல்கள், பெரியவர்களின் உதவிகள் போன்ற பலன்கள் கிடைக்கும். இடுப்பு வலி, வாதபீடை, கிருமித்தாக்கம், மூலநோ என்பன வர இடமுண்டு. எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

எம்மைத் தேவையில்லை என எண்ணுபவர்கள் மத்தியில் நாம் எப்படி சுய கௌரவத்துடன் வாழமுடியும். தொழில் ஸ்தானத்தில் மனக்குமுறல் வரும். பொறுமையாக இருக்கவும். மனிதவாழ்வு என்பது தொடர்நிலைப் போராட்டம், மனம் கலங்கிப் போகக் கூடாது. வாதப்பிடிப்பு, வயிற்றுவருத்தம், நரம்புத் தொல்லை, பயம் என்பன கொடுக்கும். விவசாயத்துறை, ஆசிரியத்துறை, இரசாயனத்துறை, மருந்துத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரித்தபடி இருக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

ஒருவர் கூலிக்காகக் கஷ்டப் படலாம். ஆனால் உயிர்போகும் காரியங்களில் ஈடுபடுவது புத்திசாதுரியமல்ல. தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் சகஜம். குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். சகோதரரர்களின், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். கிருமித் தாக்கங்கள், நரம்புச் சோர்வு, சல வருத்தம், பிறசர், சளி, உஷ்ணபீடைகள் ஏற்படலாம். சட்டத்துறை, பாதுகாப்புத் துறை, குருத்துறை போன்றவர்களுக்கு பலவித நன்மைகள் கொடுக்கும். தூரத்துச் செய்திகளால் மகிழ்ச்சி, மனநிறைவு அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### தனுசு

நம்பிக்கை என்பது - உறுதி, உண்மை, சத்திய நிலையிலிருப்பவர்களிடம் இருந்துதான் பிறக்கின்றது என எண்ணுகின்றார்கள். உயர் பீடங்களில் இருப்பவர்கள் எப்பொழுதும் உண்மையான பேச்சு, செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள் என எண்ணுகிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் வருமான அதிகரிப்பு இருக்கின்றது. நாரிநோ, கல்லீரல் நோய், வயிறு, கைகால்நோ இருக்கும். கம்பியூட்டர், அச்சுக் கலை, ஹோட்டல், இசைத்துறை, பிரயாணத் துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். தூரத்துச் செய்திகள் மகிழ்ச்சியைத் தரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### மகரம்

பணம் - படிப்பு முக்கியம்தான். அதேபோன்று பண்புள்ள மன இயல்பும் முக்கியம். இதை உயர்பதவியிலுள்ளவர்கள் மறந்து விடுவதனால் பலவித துன்பங்களில் நல்லவர்கள் அகப்பட்டுக்கொள்கின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் இருக்கும். பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். சிலருக்கு குடும்பப் பிரிவுவரும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். வயிற்றுநோ - நரம்பு வியாதி, மனப்பயம், மூட்டுவலி, கைகால் பிடிப்பு என்பன வரும். சட்டத்துறை, மருந்துத்துறை, போக்குவரத்துத் துறை, செய்தித்துறை போன்றவர்கள் முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### கும்பம்

ஆவேசத்தில் - அமைதியற்றிருப்பவர்களிடம் எதைச் சொல்லியும் புரியவைக்கமுடியாது. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புகள் வரும். பதட்டம் நிலவும். பொருள் வரவு இருக்கும். உறவினர் வருவர். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தூரதேச செய்திகள் வரும். கால் வருத்தம், மூட்டு வியாதி, சளி, வாய்வுத் தொல்லைகள், தலையம்மல், பித்த வருத்தங்கள் என்பன கொடுக்கும். விவசாயத்துறை, குருத்துறை, போக்குவரத்துத்துறை, சந்தைத் துறை போன்றவர்கள் நன்மையடைவார்கள். காணி - பூமி, வீடு சம்பந்தமான விசாரணைகள் நடக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.*

### மீனம்

போட்டி வந்தால் பணமோ - பாசமோ எதுவும் செய்துவிடமுடியாது. தொழில் ஸ்தானத்தில் கருத்துவேற்றுமை கொடுக்கும் சுய கௌரவம், மனவைராக்கியம் இருக்கும். ஆடை, ஆபரணச் செலவுகள் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் வருவர். இனஜன தொடர்புகள் ஏற்படும். சளித் தொல்லைகள், பித்தத்தால் வயிற்று வருத்தம், தலைச்சுற்று, கைகால் சோர்வு, பாதத்தில் வருத்தம் என்பன ஏற்பட இடமுண்டு. எண்ணெய்த்துறை, பிரயாணத்துறை, கடற்றுறை, மருத்துவத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.*



வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சாஹித்திய விழா குடத் தனை அ.மி.த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை பிரதம டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் உ.அ.அதிபர் வீ.பி.வேலாயுதபிள்ளையும் காணப்படுகிறார். *(படம்:வடமராட்சிச் செய்தியாளர்)*

# ஆஞ்சநேயரை வழிபடுவோர் மனோதைரியம், உடற்பலம் பெறுவர்



**ஆஞ்சநேயரின் ஜயந்தி தினம் நேற்றாகும். அதனையொட்டிய கட்டுரை இது.**

*"தக்க இன தகாதன இன்ன*
*வென்று*
*ஒக்க வுன்னலதாயின்*
*உயர்நதுள்*
*மக்களும் விலங்கே மனுவின்*
*னெறி*
*புக்கவேலங் விலங்கும்*
*புத்தேளிரே"*

'மனிதனும் தெய்வமாகலாம்; ஆனால் குரங்கு முகம் பொருந்திய மனிதராக அவதரித்த ஆஞ்சநேயர் தெய்வமாகவும், சிறந்த ராம பக்தராகவும் விளங்குகிறார்.

வலிமையும், ஆற்றலும் பொருந்திய வாயுபகவான் அஞ்சியை காந்தர்வ மணம்புரிந்ததன்மூலம் பிறந்த அருட் குழந்தையே மாருதி - அனுமான் - ஹனுமன் என்று அழைக்கப்படும் ஆஞ்சநேயர். இவரை அனுமந்தையா, ஆஞ்சநேயலு, மகாவீர் என்றும் அழைப்பர்.

ஒருநாள் அதிகாலைப் பொழுதில் சூரியன் உதயமாகும் போது செம்பழம் என நினைத்து அதைத் பறிப்பதற்குப் பாய்ந்தான். அன்று சூரியகிரகணம் ஆதலால் இராகுவும் சூரியனைப் பிடிப்பதற்கு முயற்சி செய்தான். நடக்கப்போகும் விபரீதத்தை இந்திரன் உணர்ந்து தன் வச்சிராயுதத்தால் ஆஞ்சநேயரை மூர்ச்சையுற வைத்தான். பின் தான் தோன்றி மூர்ச்சை தெளிவித்து ஆஞ்சநேயரின் வீரதீரச் செயல்கள் உலகை வியக்கவைக்கும் என்று ஆசீர்வதித்துச் சென்றான். குறும்புத்தனமும், வீர பராக்கிரமும் கொண்ட சிறுபிள்ளையின் விளையாட்டால் கோபமுற்ற முனிவர்கள், அனுமான் தன் வலிமையைப்பற்றி உணராமல் போகட்டும் என்று சாபமிட்டனர்.

அவர் சுக்கிரீவன் என்னும் அரசனுக்கு கல்லாமல் நல்லறிவும், மதிநுட்பமும், ஆற்றலும் பெற்ற அமைச்சராக இருந்தவர். ராமபிரான் அவரைச் சொல்லின் செல்வர் என்று அழைத்தார். சீதா பிராட்டியார் அவரை அம்மையாய் அத்தனாய் அன்பனே அருளின வாழ்வே என்று சிறப்புறப் போற்றுவதாகக் கம்பன் கூறுகிறார். எதிரியாகிய இராவணன் போர்க்களத்தில் அவருடைய போர் மறத்தை இயக்கும் போது *"வலியென்பது உளதோ அது நின் பாலது மறவோய்"* என்று புகழ்கின்றார்.

யுத்த களத்தில் தேரேறிவந்த இராவணன்முன் தோன்றிநின்ற ராமனைத் தானே தோளில் தாங்கி யுத்தத்தை நடத்தினார். அந்த இடத்தில் கன்று தாங்கிய தாயென கம்பர் கூறும்போது ராமர் குழந்தையாகவும், ஆஞ்சநேயர் தாயாகவும் நிற்கும் காட்சி எவ்வளவு இன்பம் நிறைந்த பக்தி அனுபவத்தை ஏற்படுத்துகிறது. அதுபோன்றே பட்டாபிஷேகத்தில் "அரியனை அனுமன் தாங்க" என்னும் காட்சி சிறப்பானதே. பட்டாபிஷேகத்தின்போது ஆஞ்சநேயா நீ என்னைத் தழுவிக்கொள் என்று ராமர் அழைத்து அவரது கரங்களுக்குள் நுழைந்து நெகிழும் காட்சி ராமர் ஆஞ்சநேயரைப் பெருமைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இன்னும் சிரஞ்சீவிகளுள் ஒருவரான ஆஞ்சநேயர், தனக்கென இன்றி பிறர்க்காகவே பணிசெய்யும் அவர் ராம தியானத்தில் இருப்பதே பெருமை. குரங்கு, நரசிம்மம், கருடன், பன்றி, குதிரை ஆகிய ஐந்து முகங்களுடைய விஷ்வரூபத்தில் சீதாபிராட்டியாருக்குத் தரிசனம் கொடுக்கும் காட்சி பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆகும்.

அருச்சுனன் சேதுபாலத்தைப் பார்த்து கேலிசெய்தபோது, அன்பு பாலம்தான் வலிமையானது என்பதை உணர்த்த, பின் பாரதப் போரில் அருச்சுனனின் தேரில் கொடியாக இருந்து போரை நடத்தினார்.

ஒருசமயம் திரௌபதியின் வேண்டுதலால் பாரிஜாத மலரைப் பறிக்கச் சென்ற வீமனுக்கு தனது வலிமையை உணர்த்தி, அவனது கர்வதைக் குறைத்து வீமனுக்கு தாம் அணணன் என்பதை தெரியப்படுத்தி, அவனை ஆரத்தழுவி ஆசீர்வதித்து ஆஞ்சநேயரை வழிபடுவோர் மனோதைரியம், உடற்பலம், அறிவு, ஆற்றல், காரியசித்தி, இசைஞானம் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வர். நோய்களிலிருந்து விடுதலை பெறுவர்.

ஆஞ்சநேயரின் ஜெயந்தி தினம் மார்கழி மாத மூலநட்சத்திரமும் அமாவாசைத் திதியும் கூடிய தினமாகும். சித்திரை மாத நாம நவமியும் மாதம்தோறும் வரும் கேட்டை நட்சத்திரமும், வியாழன், புதன், சனி ஆகியன ஆஞ்சநேயரின் வழிபாட்டுகுச் சிறந்த நாள்கள்.

அவரை வழிபடும்போது செந்தூரம், துளசி, குங்குமத் திலகம், துளசிமாலை, வெற்றிலைமாலை, வெண்ணெய் என்பவற்றை அணிவது நன்மை தரும்.

வாழைப்பழம், வடை, தயிர்ச்சாதம், கடலை, பயறு, கறியமுது என்பன ஆஞ்சநேயருக்கு விருப்பமான நிவேதனப் பொருள்கள் ஆகும். ☆

## ஜோ எகட்டனின் ஜெசித்தாரா

இன்று முதல்........வழங்கும்

குங்குமப்பு, ஸ்பெஷல் சிக்கின் புரியாணி

ரூபா 125 மட்டுமே.

*எமது உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு மூவர்ணக் கலண்டர் இனாம்!*

வழமையான உணவு வகைகளும் வழமைபோல...

ஜோ எகட்டனின்
ஜெசித்தாரா விருந்தகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை, சுண்டுக்குளி.

★ நவயுகத்தின் நாயகி ஜெசித்தாரா ★

(97045)


## முதலாவது வருட நினைவலைகள்

அன்னை மடியில் 05 - 05 - 1950



இறைவன் அடியில் 25 - 12 - 2000

திருமதி

**நாகேஸ்வரி(யோகா) லிங்கப்பிள்ளை**

திதி: 13.01.2002

ஆண்டு ஒன்று ஆனதுவே! இன்னும்
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள்எங்கள் நெஞ்சங்களில்
நீங்காது நிறைந்திருக்கும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இல.10, சீனிவாசகம் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (C/20273) - குடும்பத்தினர்

## பாவனையாளர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.13

யாழ்.மாவட்டத்தில் தற்பொழுது பாவனையாளர் பாதுகாப்புச்சட்டம் மற்றும் நிறுவை, அளவைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளால் வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

வியாபார நிலையங்களில் விலைப பட்டியல் வைக்காத மற்றும் பொருள்களின் நிறையைக் குறைத்து விற்பனை செய்த 12 வியாபாரிகள் மீது அண்மையில் இந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். விரைவில் இவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதத்தில் நிறைகுறைந்த பாணை விற்பனை செய்த சிலருக்கு நீதிமன்றினால் தண்டப்பணம் அறவிடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-10)

## கலந்துரையாடல்

யாழ்.குடாநாட்டின் மண்ணெண்ணெய் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் காலை 10.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் குடாநாட்டின் உள்ள அனைத்துப் ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்கள், பிரதேச செயலர்கள, உதவி அரசாங்க அதிபர்கள் மறறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட ஏனைய திணைக்களங்களின தலைவர்கள் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என யாழ்.அரச அதிபர் கேட்டுள்ளார். (ம-7)

## குடாநாட்டில் திருட்டுக்கள்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள ஈஸ்வரன் உணவகத்தில் கடந்த வாரம் இரவு வேளையில் பின்கதவு உடைக்கப்பட்டு பணமும் நகையும் திருடப்பட்டுள்ளன.

பின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் மேசை லாச்சியில் இருந்த ஆயிரம் ரூபா பணத்தையும், சிறுமிகள் அணியும் 2பவுண் பெறுமதியான நகைகளையும் திருடிச் சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (ம-173)


We Serve

## மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்

சமூக மேம்பாட்டுக்கும்
நலிவுற்ற மக்களினதும் மேம்பாட்டுக்கான
நிதி சேகரிப்பதற்காக நடத்தும் நிகழ்ச்சி.

அருணா இசைக்குழுவினர் வழங்கும்

பொன்மாலைப் பொழுது

*இடம்:* மானிப்பாய் நகர மண்டபம்

*காலம்:* நாளை(14-01-2002) தைப்பொங்கல் தினம்

*நேரம்:* மாலை 3.30 மணி *(புதிய நேரம்)*

*அன்றைய தினம் மண்டப வாசலிலும்*
*ரிக்கெற்களைப் பெறலாம்.*

*பிரசுர உதவி:* லயன்.R.சிறிகாந்தன்
*உரிமையாளர்:*

| பிரவின்ஜா ஜுவல்லறி, ஆலடிச் சந்தி, மானிப்பாய். *T.P. 3600.* | புதிய கஜீபன் நகைமாடம், கே.கே.எஸ். வீதி, இணுவில். (C/20274) |
|---|---|


## கண்ணீர் அஞ்சலி

திருமதி

சந்தானலெட்சுமி பரமசிவம்

*(ஆசிரியை, கோண்டாவில் பரம்சோதி வித்தியாலயம்)*

அவர்களின் அன்புத் தந்தையார்

**ஐயாத்துரை தம்பிராசா**

அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இசையாசிரியர் கழகம்,
வலயம் I , யாழ்ப்பாணம்.

(97044)

## வருக! வருக!! என உவகையுடன் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் மாண்புமிகு டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா அவர்களையும் அவரது குழுவினரையும் வருக! வருக!! என உவகையுடன் வரவேற்று மகிழ்கின்றோம்.

Chopromam Organisation Cordially welcomes
The Honourable Minister of Rehabilitation, Resettlement and Refugees

# Dr.Jayalath Jayawardene

and His Entourage on the Occasion of their official visit to the Northern Region.



சிந்தனை, வாக்கு, செயல் ஆகிய மூன்றும் இணைந்த திரிகரண சுத்தியுடன்
தமிழ் மக்களின் சொல்லொணாத் துன்பங்களைச் சிந்தையில் ஏற்று தங்கள் உயிரைத் துச்சமென மதித்து
வன்னியில் நீங்கள் மேற்கொண்ட மனிதாபிமான மருத்துவ உதவிகளை எம் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள்.

Sir,

We take this opportunity to offer you our felicitations and best wishes on behalf of the thamil people for all your humanitarian assistances to bring solace to the forsaken people of the Vanni & the Jaffna regions.

தங்கள் வருகையால் உவகையுறும்:

***CHANKANAI ORIGINAL PRODUCTS MANUFACTURERS (CHOPROMAN)***

மாப்பியன் லேன், மானிப்பாய்.

(97434)

# டாக்டர்கள் குழு பெப்.12இல் யாழ். வரும்

யாழ்ப்பாணம்,ஜன.13

பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சையில் நிபுணத்துவம் வாய்ந்த எட்டு டாக்டர்கள் அங்கம்வகிக்கும் குழு அடுத்தமாதம் 12ஆம் திகதியே யாழ். ஆஸ்பத்திரிக்கு வருகைதர இருப்பதாக யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இக்குழு இருவாரம் யாழ். ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)


## 2ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY



## செல்வி பி.சலோமியா

புதிய செம்மணி வீதி, வேளாதோப்பைச் சேர்ந்த பிறேம் - மலர் தம்பதியினரின்

செல்வப் புதல்வி சலோமியா

தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (13-01-2002) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். சலோமியாவை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, சித்தா, அன்பு அப்பப்பா, அப்பம்மா, மல்லாவியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, தம்பி மற்றும் சித்தப்பா, அத்தை, கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் கோவிலடியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, ஆசை அண்ணா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரோடும் சிறப்போடும் நீடுழி வாழ வேண்டும் என வாழ்த்துகின்றார்கள்.

புதிய செம்மணி வீதி,
வேளாதோப்பு. (97043)

தகவல்:
பிறேம்குமார் (அப்பா).



## Computer College
## கணனிக் கல்லூரி

ஜனவரி முதல் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

Ms OFFICE XP - 2002
Adobe Pagemaker
Corel DRAW 10
GIF ANIMATOR
Adobe Photoshop
WEB Designing
Cool 3D
I Filmedit

Entertainment Studies for O/L Students



விபரங்களுக்கு: Director - Computer College
337, Kasthuriyar Road,
Jaffna.



## மது கல்வி நிறுவனம்
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**2004 A/L கலை/விஞ்ஞானம்**

ஆரம்பம்: 16-01-2002 (புதன்) பிற்பகல் 4.00 மணி (பு. நேரம்)

| விஞ்ஞானம் | | கலை |
|---|---|---|
| PHY. - K.ரமேஸ் | அனுமதியை உடன் பெறவும். | H.C. - திரு.சிவமகாலிங்கம் |
| CHE. - K.பவான் | தரம் 6 தொடக்கம் | TAM. - பாலகணேசன் |
| BIO - S.தயாபரன் | 11 வரையான | LOG. - காறுேயந்தன் |
| C.MATHS - S.தீபன் | சகல வகுப்புகளும் | ECO. - பிரபல ஆசிரியர் |
| (C/20249) | நடைபெற்றுவருகின்றன. | - நிர்வாகி. |


## கண்ணீர் அஞ்சலி

சுன்னாகம் வர்த்தகர் சங்க முன்னாள் தலைவரும்
A.C.S. குழுப் உரிமையாளரும் பிரசித்த நொத்தாரிசும்
சத்தியப்பிரமாண ஆணையாளருமான

### A.C.S. முத்துக்குமாரு

அவர்கள் காலமானதையிட்டு சுன்னாகம் வர்த்தகர்களின் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு சுன்னாகம் வர்த்தகர்களின் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுன்னாகம் வர்த்தகர் சங்கம்.

குறிப்பு: இன்று (13-01-2002) ஞாயிற்றுக்கிழமை 2.00 மணியளவில் நடைபெறும் இறுதிக்கிரியைகளில் அனைத்து வர்த்தகர்களையும் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். (97057)

## குமார் நினைவுக்கூட்டம்

அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் இரண்டாவது நினைவு தினக்கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அ.விநாயகமூர்த்தி, ஜி.ஜி.கஜேந்திரகுமார், திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றவிருக்கின்றனர்.(ஐ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரிவு ஆசிரியர்களிடையே நடத்திவந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் 3ஆம் இடத்துக்கான ஆட்டமும் நாளை திங்கட்கிழமை பிறபகல் 2.45 மணி முதல் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் - பிற்பகல் 2.45 மணிக்கு - தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் எதிர் கரவெட்டிக் கல்விக் கோட்டம்

★ முதலாம் இடத்துக்கான ஆட்டம் - பிற்பகல் 3.45 மணி - யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம் எதிர் பலாலி ஆசிரிய கலாசாலை.(ஐ-3)

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-86)

★ ★ ★

வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-86)


## SHAMROCK
**A/L 2004**
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவு
ஆரம்பம் 14.01.02
திங்கள் 3.p.m.
(C/20279)



## லஷ்மி இணுவில்
பொங்கல் வெளியீடு
இன்று முதல்
அப்பாஸ், மம்முட்டி, தேவயானி, ரம்பா, செந்தில் நடித்த
**ஆனந்தம்**
தினசரி:- 10.30, 2.30 (ப.நே.)
விசேட காட்சி 5.00, 9.00 (ப.நே.)
(97059)



## ராஜா யாழ்ப்பாணம்
வடிவேலு, விவேக், குஷ்பு
மற்றும் பலர் நடித்த
**விரலுக்கேத்த வீக்கம்**
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
(C/20092)



## நிரஞ்சனாஸ்
சங்கானை
இன்று மட்டும்
கமல் (இரட்டை வேடம்),
மனீஷா, ரவீனா மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்** (ரீல்ஸ்)
தினசரி 11.00, 2.30, 5.30 (பு.நே.)
நாளை முதல்
பிரியாத வரம் வேண்டும்
(C/20271)



## நாகம்ஸ் சுன்னாகம்
மகத்தான பொங்கல் வெளியீடு
சரத்குமார், மீனா, பிரகாஷ்ராஜ்
நடித்த
**ரிஷி**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## தம்பு பரராஜசிங்கம்

(இளைப்பாறிய எலக்ரிக்கல் சுப்பிரிண்டன்ட்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பரராஜசிங்கம் நேற்றுமுன்தினம் (11.01.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - மாணிக்கத்தின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் யோகராசாவின் சகோதரரும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாமினி (சுவிஸ்), அமுதினி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஈசன் (சுவிஸ்), மதன் (கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமனாரும் சாளினி, சாரங்கி (சுவிஸ்), கௌதம் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2002) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.30 மணியளவில் (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச் றோட்,
உடுவில். (97055)

தகவல்:
மனைவி,மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,உறவினர்.

## க. அண்ணாமலை

புத்தூர் மணற்பகுதியைப் பிறப்பிடமாகவும் இல.31/29,சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட க.அண்ணாமலை அவர்கள் 10.01.2002 வியாழக்கிழமை வன்னியில் காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.31/29,சங்கிலியன் வீதி,
நல்லூர். (97058)

தகவல்:
அ.மகேந்திரன்
(மகன்)

## குமாரசாமி நவரத்தினசாமி

பருத்தித்துறை V.M.றோட்டைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு அரச வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வவுனியாவில் வசித்து வந்தவருமாகிய குமாரசாமி நவரத்தினசாமி நேற்று (12.01.2002) சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலஷ்சுமியின் அன்புக் கணவரும் கண்ணன், உருத்திரன், மாதவன், அசோகன், வரதன், உஷா, நிர்மலன், நிறைஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும் வினோதினி, சாந்தகுமாரி, விஜயலஷ்சுமி, உதயரூபி, ஜெயபாலச்சந்திரன், தேவராஜ் ஆகியோரின் மாமனாரும், வர்ணன், சாறா, சுரேன், அருள், வர்மிளா, பிரிந்தா, கீர்த்தா, பிரதாபன், நிரோசன், வீணு, ஆதவன், தன்யா, வனஜா, சுவர்ணா, சுதர்சனா, தீபா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காத்தார் சின்னக்குளம், பூந்தோட்டம், வவுனியாவில் நடைபெறும்.

(C/20283)

தகவல்:
ஜெயபாலச்சந்திரன்
(மருமகன்)

## செல்லையா பொன்னுத்துரை

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த செல்லையா பொன்னுத்துரை நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் தம்பிராசாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் தேவராணி, செல்வராணி (பிரான்ஸ்), நாகராஜா (கனடா), அற்புதஜெயம் (கனடா), பரமேஸ்வரி, குணராசா (கனடா), ரேவதி, ஜெகராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராசா, இராசையா (பிரான்ஸ்), யசோதா (கனடா), புஸ்பராணி (கனடா), சிவம்புநாதன், அஞ்சனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் சுடரஸ்கரன் (பிரான்ஸ்), சுபாசினி, றீகா, லதியா, கீர்த்திகா (பிரான்ஸ்), சாந்தஜெயம், கமலிக்கா (கனடா), விஜோஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகளின் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தற்காலிக முகவரி:
சிவன் கோயிலடி,
சித்தன் கேணி.

நிரந்தர முகவரி:
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
தெய்வானைப்பிள்ளை
(இராசம்மா - மனைவி)

(C/20288)

## கா.சி.செ.முத்துக்குமாரு

(பிரசித்த நொத்தாரிஸ், சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர், சட்ட ஆணையாளர்), (A.C.S. நொத்தாரிஸ் ஸ்தாபனம்)

சுன்னாகம், வெறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கா.சி.செ.முத்துக்குமாரு நேற்று (12.01.2002) சனிக்கிழமை காலமானார்.

இவர் தனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயலக்ஷ்மி (யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை ஆசிரியை), இராதாகிருஷ்ணன் (உதவிக் கல்விப் பணிப்பாளர்), மகாலக்ஷ்மி (யா/மல்லாகம் மகாவித்தியாலய சங்கீத ஆசிரியை), ஜனலக்ஷ்மி (ஜேர்மனி), காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன் மற்றும் அனந்தகிருஷ்ணன் (திருகோணமலை ஏரெடெக் கொம்பியூட்டர் பயிற்றுநர்), சுந்தரகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், றஜனி (பிரான்ஸ்), சிரோஜினி (திருகோணமலை), செல்வா ஆகியோரின் பெரியதந்தையும் வரதராஜன், ஜெயநாதன், சேந்திரேஸ்வரி (ஆசிரியை, திருகோணமலை சண்முக இந்து மகளிர் கல்லூரி), வசந்தகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் காண்டீபன், ஜெயப்பிரியா, சைதன்யா, சாகித்தியா, சானகோபன், சந்துருகேஷன், மிதுஷா, சைந்தவி, கௌதமன், மிதுனா, மதுஷாகரன், அரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2002) ஞாயிற்றுக்கிழமை 4.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொப்பை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (97060)

தகவல்:
வரதராஜன்
(மருமகன்)

## பொருள் விலை உயர்வை ஆட்சேபித்து

# செயலகம் முன் போராட்டம் நடத்த புளொட் அமைப்பு தயாராகின்றது

யாழ்ப்பாணம்,ஜன.13

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் எரிபொருள்களின் விலையேற்றத்தைக் கண்டித்து யாழ்.செயலகம் முன்பாக வெகுஜனப் போராட்டம் நடத்த புளொட் அமைப்பு முடிவு செய்துள்ளது.

நான்கு கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் போராட்டத்தை நடத்த இருப்பதாக அந்த அமைப்பு அரச அதிபருக்கு அறிவித்துள்ளது.

கோரிக்கைகள் வருமாறு:-

★ சகல அத்தியாவசியப் பொருள கஞம் நியாய விலைகளில் விற் பனை செய்ய நடவடிக்கை எடுத்தல்.

★ எரிபொருள்கள் - குறிப்பாக மண்எண்ணெய் நியாய விலைகளில் மக்களுக்குப் போதுமான வகையில் கிடைக்கப்பெற நடவடிக்கை எடுத்தல்.

★ கள்ளச் சந்தை வியாபாரம் தடைசெய்யப்பட நடவடிக்கை எடுக் கப்படல் வேண்டும்.

★ உடனடியாக இம்மாத (தை) உலர்உணவு விநியோகத்தை மேற் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

---

### பதவியாவில் சிப்பாய் பலி!

வெலிஓயாவுக்கு மேற்கே பதவி யாவில் உள்ள இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் கடந்த வெள் ளிக்கிழமை இடம்பெற்ற கிரனேட் வெடிப்பில் சிப்பாய் ஒருவர் உயிரி ழந்தார் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-3)

---

### பொங்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாசாலையில் இடம்பெறும் பொங் கல் மற்றும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகள், பாரம்பரிய கலை நிகழ்ச் சிகள் ஆகியனவும் அஞ்சல் செய்யப் படும்.

ரூபவாஹினி தமிழ் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் எஸ்விஸ்வநாதன் இந்த நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகி றார். (ஐ-3)

---

### மேஜர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணி வித்து வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து அவர் அங்கு சிறப்புரை யாற்றினார்.

சோதியா படையணி போராளி களின் கலை நிகழ்வுகள் இடம்பெற் றன. சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா உட்பட பல களமுனைத் தளபதி களும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

---

### றான்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை ஜனாதிபதியின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் இயங்கிவந்தது. பின னர் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டி ருந்தது.

தற்சமயம் புதிய அரசில் புனர மைப்பு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் கீழ் இந்த அதிகார சபை கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த அதிகார சபையை ஸ்ரீ லங்கா புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகார சபை என மாற்றி அமைத்து இயங்க வைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக நம்பிக்கையான வட் டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

---

### புதனன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

அதற்கு முன்பாக தாங்கள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்த ஒருமாத கால யுத்தநிறுத்தத்தை மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கும் அறி விப்பை புலிகள் தரப்பு விடுக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-6)


2 ஆவது பிரிவு
ஆரம்பம்: 16-01-2002
காலை - 7.15
O/L எடுத்தவர்களுக்கான
ENGLISH
OXFORD ENGLISH ACADEMY
P.K.Lane, பருத்தித்துறை.
By: Mr.B.JOTHY

WANTED
For Immediate appointment
M.O. or R.M.O.
Full Time/ Part Time Basis.
Advertise:
Manager,
St.Luke's Methodist Hospital,
Puttur. (97052)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
பாண்டியராஜனின்
கைலே காசை காட்டப்பா
புதிய போஸ்டர்கள் விற்பனைக்கு.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/20289)

சித்திரம்
2004 A/L
2003 A/L
தரம் 6 - 11 வரை
ஆரம்பமாகியுள்ளது.
IAT
இல. 76, ஆத்தியடி வீதி, கந்தர்மடம். (96966)

புதிய வகுப்புகள் ஆரம்பம்
Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Application
Dip. in Video Mixing
Dip. in Web Designing
Sunday 10.00
Tuesday 10.00
Duration: 3 Months
இது O/L எழுதிய மாணவர்களிற்கு மிகவும் உகந்தது
For further details
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna T.P.2674 e-mail: stpedu@slt.lk

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
100 Clock Tower Road, Jaffna
O/L
விசேட கணனிப் பயிற்சி
குறுகிய காலத்தில் ! குறைந்த கட்டணத்தில் !! சிறந்த பயிற்சி நெறி !!!
ஆரம்பம் : 19.01.2002 பகல் 10மணி
பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்காக
பெற்றோர்களே ! உங்கள் செல்வங்கள் O/L பரீட்சை முடித்து பெறுபேறுகளிற்காக காத்திருக்கிறார்களா? அவர்கள் இக்காலத்தை பயனுள்ளதாக்கி கொள்வதற்காக விசேட கணனிக் கற்கை நெறி ஒன்றை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

Jaffna Technical Institute
No.07, Palaly Road, Jaffna. (இலுப்பையடிச் சந்தியருகில்)
இலவச கணனிப் பயிற்சிநெறி 2002
CHILDREN'S PROGRAM
காலம் 3 மாதம்
2001 O/L
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சிநெறி
அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிரிவு 5 ஆரம்பம்
(C/20276) 16-01-2002 - 3.30 மணிக்கு

வடமராட்சி கண்ட பிரமாண்டம் யாழ்.மண்ணில்
※ பல வர்ணஜால ஒளியூட்டல்கள் ※ வித்தியாசமான அரங்க வடிவமைப்பு
※ பல குரலில் உங்களை மகிழ்வித்தல்
மற்றும் இன்னும் பல புதிய அம்சங்களுடன்
தைத்திருநாளை முன்னிட்டு சந்திக்க வருகிறது.
யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையினரின்
மதுரகானங்கள்
(பிரமாண்டமான இன்னிசை விருந்து)
இடம் : கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்
காலம் : இன்று (13-01-2002) ஞாயிறு காலை 10.00, பிற்பகல் 2.30 (97056)

தைப்பொங்கல் வரை மட்டும்
5% இல் இருந்து 25% வரை
சிறப்புத்தள்ளுபடி
அழகுசாதனப்பொருட்கள்,வர்ணப்படங்கள்,லேஸ்வகைகள், அன்பளிப்புபொருட்கள்,மணிக்கூடுகள்,செயின்வகைகள், Fevicryl & Acron Paint Items, வாழ்த்துமடல்கள், எவர்சில்வர்பொருட்கள்,பிளாஸ்டிக்பொருட்கள், பட்டின் பக்கிள் கவறிங்செய்தல் மற்றும்
CDயில் இருந்து CDக்கு வீடியோ,ஓடியோ பதிவுகள் செய்து பெற்றிடவும்
சந்தியா மல்டி கோட்னர்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
பிரதானவீதி, பண்டத்தரிப்பு.
(எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை)


### கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன நிர்வாகியும் கணித ஆசானுமாகிய
திரு.V.N.பத்மநாதன்
அவர்களின் பாரியார்
திருமதி சசிகலா பத்மநாதன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**பொன்னம்பலம் சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற அதிபர் - திக்கரை, களபூமி, காரைநகர்)

அவர்களின் மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

**ஐடியல் அக்கடமி**

சண்டிலிப்பாய். (C/20281) காரைநகர்.

### அறுபத்துநான்காவது அகவையில் கண்ணீர்ப் பூக்கள்

அன்னையிடம் 13 - 01 - 1938



ஆண்டவனிடம் 09 - 06 - 2001

**அமரர் ஞா.செபஸ்தியாம்பிள்ளை** (G.S.PILLAI)

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

"உமது மீட்பை என் கண்கள்
கண்டு கொண்டன" (லூக் 2:31)

ஆண்டவன் கைகளில் தவழ்ந்திடும்
எம் ஆருயிர்த் தந்தையே!
அறுபத்துநான்காவது அகவையதை கொண்டாடி - மகிழ்ந்திட
அருகிலில்லை இன்று நீங்கள் - ஆனாலும்
எம் உள்ளங்கள் உருகி நிற்க
நினைவலைகள் மோதி நிற்க - எம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.
**உங்களின் ஆன்மா இறைவனில் சாந்தி காண.**

பிரிவால் வாடும்:

மனைவி, பிள்ளைகள், தாய், மைத்துனர், உற்றார், உறவினர், நண்பர்கள், அருட்திரு. எஸ்.ஏ.றொஷான் (மகன்)

*54 2/1, இராஜசிங்க வீதி, வெள்ளவத்தை.* (96945)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.